$$= \frac{1}{2}\log(x^2+6x+25)-2\,.\,\frac{1}{4}\,.\tan^{-1}\frac{x+3}{4}$$

$$= \frac{1}{2}\log(x^2+6x+25)-\frac{1}{2}\tan^{-1}\frac{x+3}{4}+C$$

மாதிரி 2.

மதிப்பிடுக : $\int\frac{x^2+x+1}{x^2-x+1}dx$

$$x^2+x+1 = A(x^2-x+1)+B(2x-1)+C.$$

$$A = 1$$

$$-A+2B = 1$$

$$2B = 2$$

$$\therefore\quad B = 1$$

$$A-B+C = 1$$

$$\therefore\quad C = 1$$

$$\therefore\quad x^2+x+1 = (x^2-x+1)+2x-1+1.$$

$$\int\frac{x^2+x+1}{x^2-x+1}dx = \int\frac{(x^2-x+1)+(2x-1)+1}{(x^2-x+1)}dx$$

$$= \int\frac{x^2-x+1}{x^2-x+1}dx+\int\frac{2x-1}{x^2-x+1}dx+\int\frac{1}{x^2-x+1}dx$$

$$= \int dx+\log(x^2-x+1)+\int\frac{dx}{\left(x-\frac{1}{2}\right)^2+\left(\frac{\sqrt{3}}{2}\right)^2}$$

$$= x+\log(x^2-x+1)+\frac{2}{\sqrt{3}}\tan^{-1}.\left(\frac{2x-1}{\sqrt{3}}\right)+C$$

பயிற்சி 34

மதிப்பிடுக :

1. $\int \frac{dx}{x^2+2x+3}$
2. $\int \frac{dx}{x^2-12x+36}$
3. $\int \frac{dx}{x^2-2x-35}$
4. $\int \frac{dx}{x^2+5x+4}$
5. $\int \frac{dx}{1+x-x^3}$
6. $\int \frac{x^2}{x^6+2x^3+2}\, dx$
7. $\int \frac{dx}{3x^2-4x-5}$
8. $\int \frac{dx}{-1+x-2x^2}$
9. $\int \frac{x+1}{x^2+4x+5}\, dx$
10. $\int \frac{3x-2}{1-6x-9x^2}\, dx$
11. $\int \frac{5x+1}{x^2-2x-35}\, dx$
12. $\int \frac{x+5}{3+2x-3x^2}\, dx$
13. $\int \frac{4x+5}{x^2+2x+2}\, dx$
14. $\int \frac{x^2+x+1}{x^2-x+1}\, dx$
15. $\int \frac{x^2+2x}{x^2+2x+2}\, dx$
16. $\int \frac{1-3x}{2x^2-6x+5}\, dx$
17. $\int \frac{x^3}{4+2x^4-x^8}\, dx$
18. $\int \frac{x^2-x+1}{1-x-x^2}\, dx$
19. $\int \frac{1-x}{4x^2-4x+3}\, dx$
20. $\int \frac{e^x}{e^{2x}+3e^x+2}\, dx.$

1·8. அமைப்பு III—பகுதி பின்ன முறை (Method of partial fractions).

தொகைக்குக் கொடுக்கப்பட்ட சார்பின் பகுதியைச் சினைகளாகப் பிரித்து, பகுதிபின்ன முறையைக் கையாள வேண்டும்.

மாதிரி 1.

மதிப்பிடுக. $\int \frac{x^2+11x+14}{(x+3)(x^2-4)}dx$

$$\frac{x^2+11x+14}{(x+3)(x-2)(x+2)} = \frac{A}{x+3} + \frac{B}{x-2} + \frac{C}{x+2}$$

$$x^2+11x+14 = A(x-2)(x+2) + B(x+3)(x+2) + C(x+3)(x-2)$$

$x = 2$ ஐ ஈடாக்கினால், $20B = 40$

$\therefore \quad \underline{B = 2}$

$x = -2$ ஐ ஈடாக்கினால், $-4C = -4$

$C = 1$

$x = -3$ ஐ ஈடாக்கினால், $5A = -10$

$A = -2$

$$\therefore \int \frac{x^2+11x+14}{(x+3)(x^2-4)}dx$$

$$= -2\int \frac{dx}{x+3} + 2\int \frac{dx}{x-2} + 1\int \frac{dx}{x+2}$$

$$= -2\log(x+3) + 2\log(x-2) + \log(x+2)$$

$$= \log(x+3)^{-2} + \log(x-2)^2 + \log(x+2)$$

$$= \log\frac{(x+2)(x-2)^2}{(x+3)^2}$$

மாதிரி 2.

மதிப்பிடுக : $\int \frac{dx}{x^3+1}$.

$$\frac{1}{x^3+1} = \frac{A}{x+1} + \frac{Bx+C}{x^2-x+1}$$

$$1 = A(x^2-x+1) + (Bx+C)(x+1)$$

$x = -1$, ஈடாக்கினால், $3A = 1$; $\quad \therefore \quad A = \frac{1}{3}$

$x = 1$, ஈடாக்கினல் $A + 2B + 2C = 1$

$$2B + 2C = \frac{2}{3}$$

$$B + C = \frac{1}{3}$$

$x = 0$, ஈடாக்கினல், $A + C = 1$

$$C = \frac{2}{3}$$

$$\therefore \quad B = -\frac{1}{3}$$

$$\therefore \int \frac{dx}{x^3+1} = \frac{1}{3}\int \frac{dx}{x+1} + \frac{1}{3}\int \frac{-x+2}{x^2-x+1}\,dx$$

$$= \frac{1}{3}\log(x+1) + \frac{1}{3}\int \frac{-\frac{1}{2}(2x-1) + \frac{3}{2}}{x^2-x+1}\,dx$$

$$= \frac{1}{3}\log(x+1) - \frac{1}{6}\log(x^2-x+1)$$

$$+ \frac{1}{2}\cdot\int \frac{dx}{\left(x-\frac{1}{2}\right)^2 + \left(\frac{\sqrt{3}}{2}\right)^2}$$

$$= \frac{1}{3}\log(x+1) - \frac{1}{6}\log(x^2-x+1)$$

$$+ \frac{1}{\sqrt{3}}\tan^{-1}\left(\frac{2x-1}{\sqrt{3}}\right) + C$$

பயிற்சி 35

x ஐ ஒட்டித் தொகை காண்க.

1. $\dfrac{x+5}{(x-1)(x-4)}$ 2. $\dfrac{3x+4}{(x-6)(x+2)^2}$

3. $\dfrac{1}{x(x+1)(1-2x)}$ 4. $\dfrac{1}{x(x^4+1)}$

5. $\frac{3x-7}{(x-1)(x-2)(x-3)}$ 6. $\frac{3x+1}{(x+2)^2}$

7. $\frac{x}{(x-1)^2(x+2)}$ 8. $\frac{x^2}{(x-1)^3(x+1)}$

9. $\frac{x+1}{(x-1)^2(x+2)}$ 10. $\frac{x^2+1}{(x^2-1)(2x+1)}$

11. $\frac{x}{(1+x)(1+x^2)}$ 12. $\frac{3x-1}{(x^2+1)(x-2)}$

13. $\frac{x}{x^3-1}$ 14. $\frac{1}{x(x^3+x^2+x)}$

15. $\frac{\sin x\cos x}{\cos^2 x+3\cos x+2}$ 16. $\frac{\cos x}{\sin x(1+\sin x)}$

17. $\frac{\sec^2 x}{(\tan x+1)(\tan x+2)}$ 18. $\frac{2x}{(x^2+1)(x^2+3)}$

19. $\frac{x}{x^3+1}$ 20. $\frac{1}{(x^2+a^2)(x^2+b^2)}$

1·9. கோண கணிதச் சார்புகளின் தொகை காணல் (Integration of Trigonometric functions).

அமைப்பு I (Type I) $\int\frac{a\cos x+b\sin x}{l\cos x+m\sin x}dx$

வழி: தொகைக்குரிய சார்பின் தொகுதியை A (பகுதி) $+\text{B}\cdot\frac{d}{dx}$ (பகுதி)க்கு ஈடாக்கினால் எளிதில் தொகை காண முடியும்.

மாதிரி 1.

தொகை காண்க. $\int\frac{p\sin x+q\cos x}{a\sin x+b\cos x}dx$. $p\sin x+q\cos x$

$$=\text{A}(a\sin x+b\cos x)+\text{B}(a\cos x-b\sin x)$$

$$aA - bB = p$$

$$bA + aB = q$$

$$A(a^2+b^2) = ap+bq$$

$$A = \frac{ap+bq}{a^2+b^2}$$

$$B = \frac{aq-bp}{a^2+b^2}$$

$$\therefore \int \frac{p \sin x + q \cos x}{a \sin x + b \cos x}\, dx$$

$$= \frac{ap+bq}{a^2+b^2} \int \frac{a \sin x + b \cos x}{a \sin x + b \cos x}\, dx + \frac{aq-bp}{a^2+b^2} \int \frac{a \cos x - b \sin x}{a \sin x + b \cos x}\, dx$$

$$= \frac{ap+bq}{a^2+b^2} \cdot x + \frac{aq-bp}{a^2+b^2} \log (a \sin x + b \cos x) + C$$

பயிற்சி 35-A

மதிப்பிடுக

1. $\int \frac{2 \sin x + 3 \cos x}{4 \sin x + 5 \cos x}\, dx$
2. $\int \frac{2 \cos x + 3 \sin x}{4 \cos x + 5 \sin x}\, dx$
3. $\int \frac{2 \sin x + \cos x}{3 \sin x + \cos x}\, dx$
4. $\int \frac{\cos x}{\sin x + \cos x}\, dx$
5. $\int \frac{5 \cos \theta}{2 \cos \theta + \sin \theta}\, d\theta$
6. $\int \frac{\sin x + \cos x}{\sin x - 2 \cos x}\, dx$
7. $\int \frac{\sin \theta + 2 \cos \theta}{2 \sin \theta + \cos \theta}\, d\theta$
8. $\int \frac{\tan \theta}{3 + 2 \tan \theta}\, d\theta$
9. $\int \frac{\cos x + \sin x}{2 \cos x - 3 \sin x}\, dx$
10. $\int \frac{3 \cos x + 2 \sin x}{\cos x - \sin x}\, dx$

1·9·1. அமைப்பு II : (II Type) இந்த அமைப்பில் தொகைக்குரிய பொருள் மூன்று உருவங்களைப் பெறலாம்.

(i) $\int \frac{dx}{a+b\cos x}$

(ii) $\int \frac{dx}{a+b\sin x}$

(iii) $\frac{dx}{a\cos x+b\sin x}$

தொகைக்குரிய சார்பின் பகுதியில் sin x அல்லது cos x ஒரு படித்ததாகத்தான் இருத்தல் அவசியம்.

(i) $\int \frac{dx}{a+b\cos x}$

$$\cos x = \frac{1-t^2}{1+t^2},$$

$$t = \tan\frac{x}{2}, \quad \frac{x}{2} = \tan^{-1} t, \quad \frac{1}{2}\,dx = \frac{1}{t+t^2}\,.\,dt, \quad dx = \frac{2dt}{1+t^2}$$

$$= \int \frac{dx}{a+b\left(\frac{1-t^2}{1+t^2}\right)}$$

$$= \int \frac{(1+t^2)\,.\,dx}{a(1+t^2)+b(1-t^2)}$$

$$= \int \frac{\frac{(1+t^2)\,.\,2\,dt}{1+t^2}}{(a+b)+t^2(a-b)}$$

$$= \frac{2}{a-b}\int \frac{dt}{\frac{a+b}{a-b}+t^2}$$

$$= \frac{2}{a-b}\int \frac{dt}{\left(\sqrt{\frac{a+b}{a-b}}\right)^2+t^2}$$

$$= \frac{2}{\sqrt{a^2-b^2}}\tan^{-1}\left(\sqrt{\frac{a-b}{a+b}}\,t\right)$$

$$= \frac{2}{\sqrt{a^2 - b^2}} \tan^{-1} \left(\frac{a-b}{a+b} \cdot \tan \frac{x}{2} \right) (a>b)$$

$a<b$ ஆகவிருந்தால்,

$$= 2 \int \frac{dt}{(b+a) - (b-a)\,t^2}$$

$$= \frac{2}{b-a} \int \frac{dt}{\frac{b+a}{b-a} - t^2}$$

$$= \frac{2}{b-a} \int \frac{dt}{\left(\sqrt{\frac{b+a}{b-a}}\right)^2 - t^2}$$

$$= \frac{2}{2\sqrt{b^2 - a^2}} \log \frac{\sqrt{\frac{b+a}{b-a}} + t}{\sqrt{\frac{b+a}{b-a}} - t}$$

$$= \frac{1}{\sqrt{b^2 - a^2}} \log \frac{\sqrt{b+a} + \sqrt{b-a}\,.\,t}{\sqrt{b+a} - \sqrt{b-a}\,.\,t} + c$$

(ii) $\int \frac{dx}{a+b \sin x}$

$$\sin x = \frac{2t}{1+t^2}, \; t = \tan \frac{x}{2}$$

$$\frac{x}{2} = \tan^{-1}(t)$$

$$\frac{1}{2} dx = \frac{1}{1+t^2} \,.\, dt$$

$$dx = \frac{2dt}{1+t^2}$$

$$= \int \frac{\frac{2\,dt}{1+t^2}}{a+b \,.\, \frac{2t}{1+t^2}}$$

$$= \int \frac{2dt}{a\,(1+t^2) + b\,.\,2t}$$

$$= 2\int \frac{dt}{at^2+2bt+a}$$

$$= \frac{2}{a}\int \frac{dt}{t^2+\frac{2b}{a}t+1}$$

$$= \frac{2}{a}\int \frac{dt}{\left(t+\frac{b}{a}\right)^2+1-\frac{b^2}{a^2}}$$

$$= \frac{2}{a}\int \frac{dt}{\left(t+\frac{b}{a}\right)^2+\frac{a^2-b^2}{a^2}}$$

$$= \frac{2}{a}\int \frac{dt}{\left(t+\frac{b}{a}\right)^2+\left(\frac{a-b}{a}\right)^2}$$

$$= \frac{2}{a} \cdot \frac{1}{\frac{a-b}{a}} \cdot \tan^{-1} \cdot \frac{t+\frac{b}{a}}{\frac{a-b}{a}}$$

$$= \frac{2}{a-b} \cdot \tan^{-1} \cdot \left(\frac{at+b}{a-b}\right)+c$$

(iii) $\int \frac{dx}{a\cos x+b\sin x}$

$$= \int \frac{dx}{a\left(\frac{1-t^2}{1+t^2}\right)+b\cdot\frac{2t}{1+t^2}}, \quad \left(t=\tan\frac{x}{2}\right)$$

$$= \int \frac{\frac{2\,dt}{1+t^2}}{a\left(\frac{1-t^2}{1+t^2}\right)+b\cdot\frac{2t}{1+t^2}}$$

$$= \int \frac{2dt}{a(1-t^2)+2bt}$$

$$= \int \frac{2dt}{a+2bt-at^2}$$

$$= \frac{2}{a}\int \frac{dt}{1+\frac{2b}{a}t-t^2}$$

$$= \frac{2}{a}\int \frac{dt}{1-\left(t-\frac{b}{a}\right)^2}$$

$$= \frac{2}{a}\cdot\frac{1}{2}\cdot\log\frac{1+\left(t-\frac{b}{a}\right)}{1.-\left(t-\frac{b}{a}\right)}$$

$$= \frac{1}{a}\cdot\log\frac{a+at-b}{a-at+b}$$

$$= \frac{1}{a}\log\frac{a(1+t)-b}{a(1-t)+b}+c.$$

மாதிரி 1.

மதிப்பிடுக: $\int \frac{dx}{5+3\cos x}$

$$\cos x = \frac{1-t^2}{1+t^2}$$

$$t = \tan\frac{x}{2}$$

$$\frac{x}{2} = \tan^{-1}(t)$$

$$\frac{1}{2}\cdot dx = \frac{1}{1+t^2}\,dt$$

$$dx = \frac{2dt}{1+t^2}$$

$$\int \frac{\frac{2dt}{1+t^2}}{5+3\left(\frac{1-t^2}{1+t^1}\right)}$$

$$= \int \frac{2dt}{5(1+t^2)+3(1-t^2)}$$

$$= 2\int \frac{dt}{8+2t^2}$$

$$= \int \frac{dt}{4+t^2}$$

$$= \int \frac{dt}{(2)^2+t^2}$$

$$= \frac{1}{2} \tan^{-1}\left(\frac{t}{2}\right)$$

$$= \frac{1}{2} \tan^{-1}\left(\frac{\tan \frac{x}{2}}{2}\right) + c.$$

மாதிரி 2.

மதிப்பிடுக : $\int \frac{dx}{1+3 \sin x+4 \cos x}$

$t = \tan \frac{x}{2}$ ஆனல்

$$= \int \frac{\frac{2dt}{1+t^2}}{1 + 3 \cdot \frac{2t}{1+t^2} + 4\left(\frac{1-t^2}{1+t^2}\right)}$$

$$= \int \frac{2dt}{(1+t^2)+6t+4(1-t^2)}$$

$$= \int \frac{2dt}{5+6t-3t^2}$$

$$= \frac{2}{3} \int \frac{dt}{\frac{5}{3} + 2t - t^2}$$

$$= \frac{2}{3} \int \frac{dt}{\frac{8}{3} - (1-t)^2}$$

$$= \frac{2}{3} \int \frac{dt}{\left(\sqrt{\frac{8}{3}}\right)^2 - (1-t)^2}$$

$$= \frac{2}{3} \cdot \frac{1}{2\sqrt{\frac{8}{3}}} \cdot \log \frac{\sqrt{\frac{8}{3}} + 1 - t}{\sqrt{\frac{8}{3}} - 1 + t}$$

$$= \frac{1}{2\sqrt{6}} \log \frac{\sqrt{\frac{8}{3}} - 1 + t}{\sqrt{\frac{8}{3}} + 1 - t}$$

$$= \frac{1}{2\sqrt{6}} \log \frac{2\sqrt{2} - \sqrt{3}\left(1 - \tan\frac{x}{2}\right)}{2\sqrt{2} + \sqrt{3}\left(1 - \tan\frac{x}{2}\right)}$$

பயிற்சி 36

கீழ்வருவனவற்றை மதிப்பிடுக.

1. $\int \frac{dx}{12+13\cos x}$
2. $\int \frac{dx}{5+4\sin x}$
3. $\int \frac{dx}{13+12\cos x}$
4. $\int \frac{dx}{2\cos x+3\sin x}$
5. $\int \frac{dx}{1+\sin x+\cos x}$
6. $\int \frac{dx}{5-4\sin x}$
7. $\int \frac{dx}{3\cos x-4\sin x}$
8. $\int \frac{dx}{5\cos 2x+12\sin 2x}$
9. $\int \frac{1}{1+\tan x}$
10. $\int \frac{\sin x}{3+4\sin x}\,dx$
11. $\int \frac{\cos x}{5-3\cos x}\,dx$
12. $\int \frac{\sin x}{5+4\sin x}\,dx$

1·9.2 விகிதமுருத சார்புகளின் தொகை காணுதல் (Integration of Irrational functions).

தொகை காணக் கையாளப் படும் பொது விதிகள் :

(1) தொகை காணும் சார்பில், வர்க்க மூலக்குறியின் கீழ் ஒருபடி சினையாக விருந்தால், அச்சினையை u^2 க்கு ஈடாக்க வேண்டும்.

(2) வர்க்கமூலக் குறியின் கீழ் அமையும் சார்பு, a^2+x^2 ஆக விருந்தால் $x=a\tan\theta$ அல்லது $x=a\sinh\theta$ வை பிரதியிட வேண்டும்; a^2-x^2 ஆக விருந்தால் $x=a\sin\theta$ வைப் பிரதியிடவேண்டும்; x^2-a^2 ஆக விருந்தால் $x=a\sec\theta$ அல்லது $x=a\cosh\theta$ வைப் பிரதியிடவேண்டும்.

மாதிரி 1.

மதிப்பிடுக. $\int \frac{dx}{x\sqrt{1+x}}$

$1+x=u^2$ என்க.

$$dx = 2u\,du.$$

$$= \int \frac{2u\,du}{(u^2-1)\,.\,u} = \int \frac{2du}{u^2-1}$$

$$= 2\,.\,\frac{1}{2}\,.\log\frac{u-1}{u+1}$$

$$= \log\frac{\sqrt{1+x}-1}{\sqrt{1+x}+1}+c.$$

மாதிரி 2.

மதிப்பிடுக : $\int \frac{dx}{(1-2x^2)\sqrt{1-x^2}}$

$x=\sin\theta$, என்க.

$$dx = \cos\theta\,d\theta.$$

$$= \int \frac{\cos\theta \, d\theta}{(1-2\sin^2\theta)\,.\,\cos\theta}$$

$$= \int \frac{dx}{\cos 2\theta} = \int \sec 2\theta \, d\theta$$

$$= \frac{1}{2}\log(\sec 2\theta + \tan 2\theta)$$

$$= \frac{1}{2}\log\left(\frac{1+\sin 2\theta}{\cos 2\theta}\right)$$

$$= \frac{1}{2}\log\left(\frac{\overline{\cos\theta+\sin\theta}^2}{\cos^2\theta-\sin^2\theta}\right)$$

$$= \frac{1}{2}\log\left(\frac{\cos\theta+\sin\theta}{\cos\theta-\sin\theta}\right)$$

$$= \frac{1}{2}\log\left(\frac{\sqrt{1-x^2}+x}{\sqrt{1-x^2}-x}\right) + c.$$

பயிற்சி 36-A

1. $\int x^3\sqrt{1-x^2}\,dx$

2. $\int \frac{x^3}{\sqrt{2x-1}}\,dx$

3. $\int \sqrt{\frac{x+1}{x-1}}\,dx$

4. $\int \frac{x^2}{\sqrt{1-2x}}$

5. $\int \frac{x\,dx}{1+\sqrt{x}}$

6. $\int \frac{4x+5}{\sqrt{x^2+1}}\,dx$

7. $\int \frac{dx}{(x+2)\sqrt{x+3}}$

8. $\int \frac{\sqrt{x}}{1+x}\,dx$

9. $\int \frac{dx}{(x+1)\sqrt{1-x^3}}$

10. $\int \frac{dx}{(x^2+a^2)^{3/2}}$

11. $\int \frac{dx}{(a^2+x^2)^{3/2}}$

12. $\int \frac{dx}{(x+1)\sqrt{x^2-1}}.$

திட்ட அமைப்புகள் அல்லது வாய்பாடுகள் :

(i) $$\int \frac{dx}{\sqrt{a^2 - x^2}} = \sin^{-1} \frac{x}{a} + C$$

(ii) $$\int \frac{dx}{\sqrt{a^2+x^2}} = \sinh^{-1} \frac{x}{a} + C$$

(iii) $$\int \frac{dx}{\sqrt{x^2 - a^2}} = \cosh^{-1} \frac{x}{a} + C$$

(iv) $$\int \sqrt{a^2 - x^2}\, dx$$

$$= \frac{x\sqrt{a^2 - x^2}}{2} + \frac{a^2}{2} \sin^{-1} \frac{x}{a}$$

(v) $$\int \sqrt{a^2+x^2}\, dx$$

$$= \frac{x\sqrt{a^2+x^2}}{2} + \frac{a^2}{2} \sinh^{-1} \frac{x}{a}$$

(vi) $$\int \sqrt{x^2 - a^2}\, dx$$

$$= \frac{x\sqrt{x^2 - a^2}}{2} - \frac{a^2}{2} \cosh^{-1} \frac{x}{a}$$

தெரிப்பு (i) $$\int \frac{dx}{\sqrt{a^2 - x^2}} = \sin^{-1} \frac{x}{a} + C$$

$x = a \sin \theta$ என்க.

$$dx = a \cos \theta \, d\theta$$

$$= \int \frac{a \cos \theta \, d\theta}{\sqrt{a^2 - a^2 \sin^2 \theta}} = \int \frac{a \cos \theta \, d\theta}{a \cos \theta}$$

$$= \int d\theta = \theta = \sin^{-1} \frac{x}{a} + C$$

(ii) $$\int \frac{dx}{\sqrt{a^2+x^2}} = \sinh^{-1} \frac{x}{a} + C$$

$x = a \sinh \theta$ என்க.

$$dx = a \cosh \theta \, d\theta$$

$$= \int \frac{a \cosh \theta \, d\theta}{\sqrt{a^2+a^2 \sinh^2 \theta}}$$

$$= \int \frac{a \cosh \theta \, d\theta}{a \cosh \theta}$$

$$= \int d\theta = \theta = \sinh^{-1} \frac{x}{a} + C$$

(iii) $$\int \frac{dx}{\sqrt{x^2-a^2}} = \cosh^{-1} \frac{x}{a} + C$$

$x = a \cosh \theta$ என்க.

$$dx = a \sinh \theta \, . \, d\theta$$

$$= \int \frac{a \sinh \theta}{\sqrt{a^2 \cosh^2 \theta - a^2}} d\theta$$

$$= \int \frac{a \sinh \theta}{a \sinh \theta} d\theta$$

$$= \int d\theta = \theta = \cosh^{-1} \frac{x}{a} + C$$

(iv) $$\int \sqrt{a^2-x^2} \, dx$$

$$= \frac{x\sqrt{a^2-x^2}}{2} + \frac{a^2}{2} \sinh^{-1} \frac{x}{a}$$

$x = a \sin \theta$ என்க.

$$\int \sqrt{a^2-x^2} \, dx$$

$$= \int \sqrt{a^2-a^2 \sin^2 \theta} \, . \, a \cos \theta \, d\theta$$

$$= \int a^2 \cos^2 \theta \, d\theta$$

$$= \int \frac{a^2 (1+\cos 2\theta)}{2} d\theta$$

$$= \frac{a^2}{2}\,\theta + \frac{a^2}{4}\,.\sin 2\theta$$

$$= \frac{a^2}{2}\sin^{-1}.\,\frac{x}{a} + \frac{a^2}{2}\,.\,\frac{x}{a}\,.\,\frac{\sqrt{a^2-x^2}}{a}$$

$$= \frac{a^2}{2}\sin^{-1}.\,\frac{x}{a} + \frac{x\sqrt{a^2-x^2}}{2}$$

$$= \frac{x}{a}\sqrt{a^2-x^2} + \frac{a^2}{2}\sin^{-1}.\,\frac{x}{a}$$

(v) $\int \sqrt{a^3+x^2}\,dx$

$x = a\sinh\theta$ என்க.

$dx = a\cosh\theta\,.\,d\theta$

$$= \int \sqrt{a^2+a^2\sinh^2\theta}\,.\,a\cosh\theta\,d\theta$$

$$= \int a^2\cosh^2\theta\,d\theta$$

$$= \int \frac{a^2(1+\cosh 2\theta)}{2}\,d\theta$$

$$= \frac{a^2}{2}\,\theta + \frac{a^2}{2}\,.\,\frac{\sinh 2\theta}{2}$$

$$= \frac{a^2}{2}\,.\sinh^{-1}\frac{x}{a} + \frac{a^2}{2}\,.\,\frac{2\sinh\theta\cosh\theta}{2}$$

$$= \frac{a^2}{2}\sinh^{-1}.\,\frac{x}{a} + \frac{a^2}{2}\,.\,\frac{x}{a}\,\frac{\sqrt{a^2+x^2}}{a}$$

$$= \frac{x\sqrt{a^2+x^2}}{2} + \frac{a^2}{2}\sinh^{-1}.\,\frac{x}{a} + C$$

(vi) $\int \sqrt{x^2-a^2}\,.\,dx$

$x = a\cosh\theta$ என்க.

$dx = a\sinh\theta\,.\,d\theta$

$$\int \sqrt{a^2\cosh^2\theta - a^2}\,.\,a\sinh\theta\,d\theta$$

$$= \int a^2\sinh^2\theta\,d\theta$$

$$= \int \frac{a^2 (\cosh 2\theta - 1)}{2} \, d\theta$$

$$= -\frac{a^2}{2} \theta + \frac{a^2}{2} \cdot \frac{\sinh 2\theta}{2} + C$$

$$= -\frac{a^2}{2} \theta + \frac{a^3}{2} \cdot \frac{2 \sinh \theta \cosh \theta}{2} + C$$

$$= -\frac{a^2}{2} \cosh^{-1} \frac{x}{a} + \frac{a^2}{2} \cdot \frac{x}{a} \cdot \frac{\sqrt{x^2 - a^2}}{a}$$

$$= \frac{x \sqrt{x^2 - a^2}}{2} - \frac{a^2}{2} \cosh^{-1} \cdot \frac{x}{a} + C.$$

மாதிரி 1.

மதிப்பிடுக. $\int \sqrt{5 - 3x^2 - 6x} \, dx$

$$= \sqrt{3} \int \sqrt{\frac{5}{3} - 2x - x^2} \, dx$$

$$= \sqrt{3} \int \sqrt{\frac{8}{3} - (x+1)^2} \, dx$$

$\int \sqrt{a^2 - x^2}$ என்ற திட்ட உருவத்தைப் பெற்றமையால், வாய்பாட்டின் மூலம்

$$= \frac{\sqrt{3}}{2} \left[(x+1) \sqrt{\frac{5}{3} - 2x - x^2} + \frac{8}{3} \sin^{-1} \sqrt{\frac{3(x+1)}{8}} \right] + c$$

மாதிரி 2.

மதிப்பிடுக : $\int \frac{dx}{\sqrt{x^2 + 4x + 8}}$

$$= \int \frac{dx}{\sqrt{(x+2)^2 + 2^2}}$$

$$= \sinh^{-1} \left(\frac{x+2}{2} \right) + c$$

மாதிரி 3.

மதிப்பிடுக : $\int \frac{4x+1}{\sqrt{x^2-6x+18}}\,dx$

$$4x+1 = A\,(2x-6)+B$$

$$2A = 4\,; \quad \therefore \quad A = 2.$$

$$-6A+B = 1$$

$$-12+B = 1$$

$$\underline{B = 13}$$

$$\int \frac{4x+1}{\sqrt{x^2-6x+18}}\,dx$$

$$= \int \frac{2\,(2x-6)+13}{\sqrt{x^2-6x+18}}\,dx$$

$$= 2\int \frac{(2x-6)\,dx}{\sqrt{x^2-6x+18}} + 13\int \frac{dx}{\sqrt{x^2-6x+18}}$$

$$= 4\sqrt{x^2-6x+18} + 13\int \frac{dx}{\sqrt{(x-3)^2+(3)^2}}$$

$$= 4\sqrt{x^2-6x+18} + 13\sinh^{-1}\left(\frac{x-3}{3}\right) + c$$

மாதிரி 4.

மதிப்பிடுக : $\int \frac{dx}{(x+1)\sqrt{x^2+9}}$.

$x + 1 = \frac{1}{t}$ என்க.

$$dx = -\frac{1}{t^2}\,.\,dt.$$

$$\therefore = \int \frac{-\frac{1}{t^2}\,dt}{\frac{1}{t}\sqrt{\left(\frac{1}{t}-1\right)^2+9}}$$

$$= \int \frac{-dt}{\sqrt{(1-t)^2+9t^2}}$$

$$= \int \frac{-dt}{\sqrt{1-2t+10t^2}}$$

$$= \frac{1}{\sqrt{10}} \int \frac{-dt}{\sqrt{\frac{1}{10}-\frac{t}{5}+t^2}}$$

$$= -\frac{1}{\sqrt{10}} \int \frac{dt}{\sqrt{\left(\frac{3}{10}\right)^2+\left(t-\frac{1}{10}\right)^2}}$$

$$= -\frac{1}{\sqrt{10}} . \sinh^{-1} . \frac{t-\frac{1}{10}}{\frac{3}{10}}$$

$$= -\frac{1}{\sqrt{10}} . \sinh^{-1} . \frac{\frac{1}{x+1}-\frac{1}{10}}{\frac{3}{10}}$$

$$= -\frac{1}{\sqrt{10}} . \sinh^{-1} . \left(\frac{9-x}{3x+3}\right) + c$$

பயிற்சி 37

1. மதிப்பிடுக : $\int \frac{dx}{\sqrt{2-3x+x^2}}$

2. $\int \frac{dx}{\sqrt{4x^2+8x+3}}$

3. $\int \frac{dx}{\sqrt{1+2x-3x^2}}$

4. $\int \frac{dx}{\sqrt{x(1+x)}}$

5. $\int \frac{dx}{\sqrt{(x-a)(b-x)}}$

6. $\int \sqrt{(x-2)(3-x)}\, dx$

7. $\int \sqrt{x^2+2ax}\, dx$

8. $\int \frac{x+2}{\sqrt{x^2+x+1}}\, dx$

9. $\int \frac{2x}{\sqrt{x^2+4x+3}}\, dx$

10. $\int \frac{3x+1}{\sqrt{2x^2+x+3}}\,dx$ 11. $\int \frac{x+2}{\sqrt{x^2+2x+2}}$

12. $\int \frac{dx}{(x-1)\sqrt{x^2+2}}$ 13. $\int \frac{x+1}{\sqrt{2x^2+x-3}}\,dx$

14. $\int \frac{2x+3}{\sqrt{4x^2+5x+6}}\,dx$ 15. $\int \frac{dx}{\sqrt{(a-x)(b+x)}}$

16. $\int \frac{dx}{(x^2+a^2)\sqrt{x^2+b^2}}$ 17. $\int \frac{dx}{(1+x)\sqrt{1+2x-x^2}}$

18. $\int \frac{dx}{(1+x^2)\sqrt{1-x^2}}$ 19. $\int \frac{dx}{(1-2x)\sqrt{3x^2+2x+1}}$

20. $\int \frac{dx}{x\sqrt{a+2bx+cx^2}}$.

1·9.2 பகுதிப்படுத்தித் தொகை காணல் (Integration by parts).

தேற்றம்: u, v என்பவை x ன் இரு சார்புகளாக விருப்பின்,

$$\int u\,dv = uv - \int v\,du \;[uv \neq \text{மாறிலி}]$$

தெரிப்பு: $\frac{d}{dx}(uv) = u\frac{dv}{dx} + v\cdot\frac{du}{dx}$ எனத் தெரியும்.

இருபக்கங்களையும் x ஐ ஒட்டித் தொகை கண்டால்

$$uv = \int\left(u\cdot\frac{dv}{dx} + v\frac{du}{dx}\right)dx$$

$$= \int u\,dv + \int v\,du.$$

$\therefore \int u\,dv = uv - \int v\,du$ ஆகும்.

குறிப்பு: இந்த விதியைக் கையாளும்போது உகந்த u, v தேர்ந்தெடுக்க வேண்டும். $\int v\,du$ எளிதில் தொகை காணும் படியாக அமைய வேண்டும்.

மாதிரி 1.

மதிப்பிடுக : $\int xe^x\,dx$

$u = x$ என்க ; $dv = e^x\,dx$ என்க.

$$\therefore \quad v = \int e^x\,dx = e^x$$

$$\int u\,dv = uv - \int v\,du$$

$$= xe^x - e^x = e^x(x-1) + c.$$

மாதிரி 2.

மதிப்பிடுக : $\int x^2 \sin 2x\,dx$

$u = x^2$ என்க ; $dv = \sin 2x\,dx$

$$v = \int dv = \int \sin 2x\,dx = -\frac{\cos 2x}{2}$$

$$\therefore \quad \int u\,dv = uv - \int v\,du$$

$$= x^2\left(-\frac{\cos 2x}{2}\right) - \int\left(-\frac{\cos 2x}{2}\right).\,d\,(x^2)$$

$$= -\frac{x^2\cos 2x}{2} + \int x\cos 2x\,dx$$

இங்கு, $v = \int dv = \int \cos^2 x\,dx = \dfrac{\sin 2x}{2}$

$$= -\frac{x^2\cos 2x}{2} + \int x\,.\,d\left(\frac{\sin 2x}{2}\right)$$

$$= -\frac{x^2\cos 2x}{2} + \frac{x\sin 2x}{2} - \int \frac{\sin 2x}{2}\,.\,dx$$

$$= -\frac{x^2\cos 2x}{2} + \frac{x\sin 2x}{2} + \frac{\cos 2x}{4} + c$$

மாதிரி 3.

மதிப்பிடுக : $\int \sin^{-1} x\,dx$

$u = \sin^{-1} x$; $dv = dx$; $\therefore \quad v = x.$

$$\int u\,dv = uv - \int v\,du$$

$$= x \sin^{-1} x - \int \frac{x}{\sqrt{1-x^2}} dx$$

$$= x \sin^{-1} x - \frac{1}{2} \int \frac{2x}{\sqrt{1-x^2}} dx$$

$$= x \sin^{-1} x - \frac{1}{2} \int \frac{-du}{\sqrt{u}} \quad [u = 1 - x^2 \text{ என்க}].$$

$$= x \sin^{-1} x + \sqrt{1-x^2}$$

மாதிரி 4.

மதிப்பிடுக : $\int \log x \, dx$

$u = \log x$; $dv = dx$; $\therefore$ $v = x$.

$$\int u dv = uv - \int v du$$

$$= x \log x - \int x \cdot \frac{1}{x} dx$$

$$= x \log x - \int dx$$

$$= x \log x - x$$

$$= x (\log x - 1) + c$$

முக்கியமான குறிப்பு : தொகைக்குரிய சார்பில் பொதுவாக $e^{ax} dx$, $\sin ax \, dx$, $\cos ax \, dx$ இவைகளை dv என்றும், மற்றதை u என்றும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தொகைக்குரிய சார்பில் $\log x$, $\sin^{-1} x$, $\cos^{-1} x$, $\tan^{-1} x$ வந்தால், அதை 'u' என்றும், மற்றதை dv என்றும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாதிரி 5.

மதிப்பிடுக : $\int \sqrt{a^2 - x^2} \, dx$

$u = \sqrt{a^2 - x^2}$ என்க. $dv = dx$; $\therefore$ $v = x$

$$\int u dv = uv - \int v du$$

$$\int \sqrt{a^2 - x^2} \, dx = x \sqrt{a^2 - x^2} - \int x \cdot \frac{1}{2\sqrt{a^2 - x^2}} (-2x) \, dx$$

$$= x\sqrt{a^2-x^2} + \int \frac{x^2}{\sqrt{a^2-x^2}}\,dx$$

$$= x\sqrt{a^2-x^2} + \int \frac{a^2-(a^2-x^2)}{\sqrt{a^2-x^2}}\,dx$$

$$= x\sqrt{a^2-x^2} + a^2\int \frac{dx}{\sqrt{a^2-x^2}} - \int \sqrt{a^2-x^2}\,dx$$

$$2\int \sqrt{a^2-x^2}\,dx = x\sqrt{a^2-x^2} + a^2 . \sin^{-1} . \frac{x}{a}$$

$$\therefore \quad \int \sqrt{a^2-x^2}\,dx = \frac{x\sqrt{a^2-x^2}}{2} + \frac{a^2}{2}\sin^{-1} . \frac{x}{a}$$

குறிப்பு: இதே முறையில் $\int \sqrt{a^2+x^2}\,dx$, $\int \sqrt{x^2-a^2}\,dx$ இவைகளின் தொகையைக் காண முடியும்.

பயிற்சி 37-A

மதிப்பிடுக:

1. $\int \tan^{-1} x\,dx$
2. $\int x\sin^{-1} x\,dx$
3. $\int x\tan^{-1} x\,dx$
4. $\int (\log x)^2\,dx$
5. $\int x^3 \log x\,dx$
6. $\int x^n \log x\,dx$
7. $\int x^2 \sin^2 x\,dx$
8. $\int x^2 \cos^2 x\,dx$
9. $\int x\sec x\tan x\,dx$
10. $\int x\sec^2 x\,dx$
11. $\int x^2 \cos 2x\,dx$
12. $\int \frac{\log x}{x^2}\,dx$
13. $\int \frac{\log x}{(x+1)^2}\,dx$
14. $\int \frac{x\sin^{-1} x}{\sqrt{1-x^2}}\,dx$
15. $\int \frac{x^2\tan^{-1} x}{1+x^2}\,dx.$

மாதிரி 6.

$\int e^x [f(x) + f'(x)]\, dx = e^x f(x) + c$ என நிரூபி. இம் முறையைக் கையாண்டு $\int \frac{e^x \cdot x}{(x+1)^2} dx$ ன் மதிப்பைக் காண்.

$$\int e^x [f(x) + f'(x)]\, dx$$
$$= \int e^x f(x) dx + \int e^x \cdot f'(x)\, dx$$
$$= \int f(x)\, d(e^x) + \int e^x f'(x)\, dx$$
$$= e^x f(x) - \int e^x f'(x) dx + \int e^x f'(x)\, dx$$
$$= e^x f(x) + c.$$

இம் முறையில் $\int \frac{e^x x}{(x+1)^2} dx$ ஐக் காண, முதலில்

$$\frac{x}{(x+1)^2} = \frac{A}{x+1} + \frac{B}{(x+1)^2} \text{ என்ற}$$

பகுதி பின்னங்களாகப் போடவும்.

$$A = 1$$
$$B = -1$$
$$\therefore \quad \frac{x}{(x+1)^2} = \frac{1}{x+1} - \frac{1}{(x+1)^2}$$

இங்கு $-\frac{1}{(x+1)^2}$, $\frac{1}{(x+1)}$ ன் வகைக் கெழு என்று காணவும். ஆகவே $\frac{1}{x+1} = f(x)$ எனக் கொள்க.

$$\therefore \quad \int \frac{e^x \cdot x}{(x+1)^2} xx = \int e^x \left[\frac{1}{x+1} - \frac{1}{(x+1)^2}\right] dx$$

$$f(x) = \frac{1}{x+1} \text{ என்க; } f'(x) = -\frac{1}{(x+1)^2}$$

$$\therefore \quad \int e^x [f(x) + f'(x)]\, dx = e^x f(x)$$
$$= \frac{e^x}{x+1} + c$$

மாதிரி 7.

$\int e^{ax} \sin bx\, dx$ ன் மதிப்புக் காண்க.

$\sin bx$, e^{ibx} ன் கற்பனைப் பகுதி

$\therefore \int e^{ax} \sin bx\, dx = \int e^{ax} \,.\, e^{ibx}\, dx$ ன் கற்பனைப்பகுதி.

$= \int e^{(a+ib)x}\, dx$ ன் கற்பனைப் பகுதி

$= \dfrac{e^{(a+ib)x}}{a+ib}$,,

$= \dfrac{e^{ax} \,.\, e^{ib\,x}}{a+ib}$,,

$= \dfrac{e^{ax} \,.\, e^{ibx} \,.\, (a-ib)}{(a+ib)\,(a-ib)}$,,

$= \dfrac{e^{ax}}{a^2+b^2}(a-ib)\,[\cos bx + i \sin bx]$,,

$= \dfrac{e^{ax}}{a^2+b^2}(a \sin bx - b \cos bx) + c$

பயிற்சி 38

1. $\int \dfrac{e^x\,(x+1)}{(x+2)^2}\,dx$
2. $\int e^x (\sin x + \cos x)\, dx$
3. $\int e^x (\tan x + \sec^2 x)\, dx$
4. $\int \dfrac{x+\sin x}{1+\cos x}\,dx$
5. $\int \dfrac{e^x \,.\, (1+\sin x)}{1+\cos x}\,dx$
6. $\int e^{ax} \cos bx\, dx$
7. $\int e^{3x} \sin 2x\, dx$
8. $\int e^x \,.\, \sin^2 x\, dx$
9. $\int e^{2x} \cos x \,.\, \cos^3 x\, dx$
10. $\int e^{3x} \cos^2 2x\, dx.$

2. வரையறுத்த தொகை

(Definite Integral)

2·1 $\int f(x)\,dx = F(x) + c$ எனக் கொள்வோம். இங்கு $x = b$ என்பதை ஈடு செய்தால் $F(x) + c = F(b) + c$ ...... (1)

அம்மாதிரியே, $x = a$ என்பதை ஈடு செய்தால்

$$F(x) + c = F(a) + c \qquad \text{...... (2)}$$

$$(1) - (2) = F(b) - F(a).$$

இந்த மதிப்பை $\int_a^b f(x)\,dx = F(b) - F(a)$ என்று குறிப்பிடுக. இதுவே $\int f(x)\,dx$ க்கு a முதல் b வரை, வரையறுத்த தொகை எனப்படும். இங்கு 'a' என்பது கீழெல்லை (lower limit) என்றும், b என்பது மேலெல்லை (upper limit) என்றும் கூறப்படும்.

மாதிரி 1.

$\int_0^{\pi/2} \sin^2 x\,dx$ ன் மதிப்பைக் காண்க.

$$\cos 2x = 1 - 2\sin^2 x$$

$$\sin^2 x = \frac{1 - \cos 2x}{2}$$

$$\int_0^{\pi/2} \sin^2 x\,dx = \int_0^{\pi/2} \frac{1 - \cos 2x}{2}\,dx$$

$$= \left(\frac{x}{2}\right)_0^{\pi/2} - \left(\frac{\sin 2x}{4}\right)_0^{\pi/2}$$

$$= \frac{\pi}{4}. \qquad [\because \quad \sin \pi = \sin 0 = 0]$$

மாதிரி 2.

$\int_0^{\pi/2} \cos^3 \theta \, d\theta$ ன் மதிப்பைக் காண்க.

$$\cos 3\theta = 4 \cos^3 \theta - 3 \cos \theta.$$

$$4 \cos^3 \theta = \cos 3\theta + 3 \cos \theta.$$

$$\cos^3 \theta = \frac{\cos 3\theta + 3 \cos \theta}{4}.$$

$$\int_0^{\pi/2} \cos^3 \theta \, d\theta = \int_0^{\pi/2} \frac{\cos 3\theta + 3 \cos \theta}{4} \, d\theta$$

$$= \frac{1}{4}\left(\frac{\sin 3\theta}{3}\right)_0^{\pi/2} + \frac{3}{4}\left(\sin \theta\right)_0^{\pi/2}$$

$$= -\frac{1}{12} + \frac{3}{4} = \frac{8}{12} = \frac{2}{3}$$

மாதிரி 3.

$\int_0^{\pi/2} \frac{\cos x}{1+\sin x} dx$ ன் மதிப்புக் காண்க.

$$\int \frac{\cos x}{1+\sin x} dx = \int \frac{du}{u} \quad (\because \; u = 1 + \sin x)$$

$$= \log u = \log (1 + \sin x)$$

$$\int_0^{\pi/2} \frac{\cos x}{1+\sin x}\,dx = \Big[\log(1+\sin x)\Big]_0^{\pi/2}$$

$$= \log\left(1+\sin\frac{\pi}{2}\right) - \log(1+\sin\theta)$$

$$= \log 2$$

பயிற்சி 39

மதிப்புக் காண்.

1. $\int_3^4 \frac{dx}{x^2-3x+2}$

2. $\int_0^2 \frac{5x}{x^2+4}\,dx$

3. $\int_0^1 \frac{x\,dx}{1+\sqrt{x}}$

4. $\int_0^{\pi/2} \sqrt{\sin\theta}\,.\,\cos^5\theta\,d\theta$

5. $\int_0^{\pi/4} \sin^5\theta\cos^2\theta\,d\theta$

6. $\int_0^{\pi/2} \sin^3 x\cos^2 x\,dx$

7. $\int_0^{\pi/2} \sin^6 x\,dx$

8. $\int_0^{\pi/2} \theta\sec^2\theta\,d\theta$

9. $\int_0^{\pi/2} \sin^4 x\,dx$

10. $\int_0^{\infty} e^{-x^2}\,.\,x^3\,.\,dx$

11. $\int_0^{\infty} \frac{dx}{(x^2+a^2)^{3/2}}$

12. $\int_0^{\pi/2} \frac{dx}{13+12\cos x}$

13. $\int_0^1 \frac{dx}{(2-x^2)\sqrt{1-x^2}}$

14. $\int_0^{\pi/2} \frac{d\theta}{1+\cos 2\theta}$

15. $\int_0^{\pi} \theta \sin^3 \theta \, d\theta$.

2·2. வரையறைத் தொகையின் பண்புகள் (Properties of definite Integrals).

பண்பு 1: $\int_a^b f(x)\,dx = \int_a^b f(u)\,du = \int_a^b f(t)\,dt$

$\because$ எல்லாத் தொகைகளும் F (b)-F (a) க்குச் சமம்.

பண்பு 2: $\int_a^b f(x)\,dx = -\int_b^a f(x)\,dx$.

வலது புறம் $= -[F(a) - F(b)]$

$= F(b) - F(a)$.

$= \int_a^b f(x)\,dx$.

பண்பு 3: $\int_a^b f(x)\,dx = \int_a^c f(x)\,dx + \int_c^b f(x)\,dx$.

வலதுபுறம் $= F(c) - F(a) + F(b) - F(c)$

$= F(b) - F(a)$

$= \int_a^b f(x)\,dx$

பண்பு 4: $\int_0^a f(x)\,dx = \int_0^a f(a-x)\,dx$

$a - x = u$ என்க.

$-dx = du$.

புது எல்லைகள் காண, $x = 0, \quad u = a$

$x = a, \quad u = 0$.

$$= \int_a^0 -f(u)\,du = \int_0^a f(u)\,du$$

$$= \int_0^a f(x)\,dx \quad [\because \text{ பண்பு } 1]$$

பண்பு 5: (i) $f(x)$ ஒற்றைப்படைச் சார்பானல்

$$\int_{-a}^{+a} f(x)\,dx = 0.$$

(ii) $f(x)$ இரட்டைப்படைச் சார்பானல்

$$\int_{-a}^{+a} f(x)\,dx = 2\int_0^a f(x)\,dx.$$

தெரிப்பு ; (i) $f(x)$ ஒற்றைப்படைச் சார்பு ஆதலால் $f(x) = -f(-x)$.

$$\int_{-a}^{+a} f(x)\,dx = \int_{-a}^{0} f(x)\,dx + \int_0^a f(x)\,dx$$

$$\int_{-a}^{0} f(x)\,dx = \int_a^0 f(-y)\,(-dy) \; [x = -y \text{ ஈடுசெய்க}]$$

$$= -\int_a^0 f(-y)\,.\,dy$$

$$= -\int_0^a f(y)\,dy$$

$$= -\int_0^a f(x)\,dx.$$

$$\int_0^a f(x)\,dx = +\int_0^a f(x)\,dx$$

$$\therefore \int_{-a}^{+a} f(x)\,dx = -\int_0^a f(x)\,dx + \int_0^a f(x)\,dx$$

$$= 0.$$

(ii) $f(x) = f(-x)$, $f(x)$ இரட்டைப்படைச் சார்பு.

$$\int_{-a}^{0} f(x)\,dx = \int_{a}^{0} f(-y)(-dy)$$

$$= -\int_{a}^{0} f(-y)\,dy$$

$$= \int_{0}^{a} f(y)\,dy$$

$$= \int_{0}^{a} f(x)\,dx.$$

$$\int_{0}^{a} f(x)\,dx = \int_{0}^{a} f(x)\,dx.$$

$$\therefore \int_{-a}^{+a} f(x)\,dx = \int_{0}^{a} f(x)\,dx + \int_{0}^{a} f(x)\,dx$$

$$= 2\int_{0}^{a} f(x)\,dx.$$

பண்பு 6: $f(x) = f(2a - x)$ ஆனல்

$$\int_{0}^{2a} f(x)\,dx = 2\int_{0}^{a} f(x)\,dx.$$

$$\int_{0}^{2a} f(x)\,dx = \int_{0}^{a} f(x)\,dx + \int_{a}^{2a} f(x)\,dx$$

$x = 2a - y$, என ஈடு செய்க.

$$dx = -\,dy$$

$$\therefore \int_{a}^{2a} f(x)\,dx = \int_{a}^{0} f(2a - y)\,.\,(-dy)$$

$$= -\int_{a}^{0} f(2a - y)\,.\,dy$$

$$= \int_0^a f(2a-y)\,dy$$

$$= \int_0^a f(2a-x)\,dx$$

$$= \int_0^a f(x)\,dx.$$

$$\therefore \int_0^{2a} f(x)\,dx = 2\int_0^a f(x)\,dx.$$

$f(x) = -f(2a-x)$ ஆனல்,

$$\int_0^{2a} f(x)\,dx = 0.$$

இப்பண்பை உபயோகப்படுத்திக் கீழ் வரும் குறிப்புகளை எளிதில் காணமுடிகிறது.

(i) $\pi = 2a$ என்க. $f(\sin x) = f\{\sin(\pi - x)\}$ ஆனல்,

$$\int_0^{\pi} f(\sin x)\,dx = 2\int_0^{\pi/2} f(\sin x)\,dx$$

(ii) $f(x)$ ஒரு ஒற்றைப்படைச் சார்பாயின்

$$f(\cos x) = f\{\cos(\pi - x)\}$$

$$\therefore \int_0^{\pi} f(\cos x)\,dx = 0.$$

(iii) $f(x)$ இரட்டைப்படைச் சார்பாயின்

$$f(\cos x) = -f\{\cos(\pi - x)\}$$

$$\therefore \int_0^{\pi} f(\cos x) = 2\int_0^{\pi/2} f(\cos x)\,dx.$$

மாதிரி 1.

நிரூபி. $$\int_0^{\pi/2} \frac{\sqrt{\sin x}}{\sqrt{\sin x}+\sqrt{\cos x}}\,dx = \frac{\pi}{4}.$$

$$I = \int_0^{\pi/2} \frac{\sqrt{\sin x}}{\sqrt{\sin x}+\sqrt{\cos x}}\,dx$$

$$\cos x = \sin\left(\frac{\pi}{2} - x\right)$$

$$\sin x = \cos\left(\frac{\pi}{2} - x\right)$$

$$\therefore\quad I = \int_0^{\pi/2} \frac{\sqrt{\sin\left(\frac{\pi}{2} - x\right)}}{\sqrt{\sin\left(\frac{\pi}{2} - x\right)}+\sqrt{\cos\left(\frac{\pi}{2} - x\right)}}$$

$$= \int_0^{\pi/2} \frac{\sqrt{\cos x}}{\sqrt{\cos x}+\sqrt{\sin x}}\,dx$$

$$2I = \int_0^{\pi/2} \frac{\sqrt{\sin x}+\sqrt{\cos x}}{\sqrt{\cos x}+\sqrt{\sin x}}\,dx$$

$$= \int_0^{\pi/2} dx = \Big(x\Big)_0^{\pi/2} = \frac{\pi}{2}$$

$$I = \frac{\pi}{4}.$$

மாதிரி 2.

நிரூபி. $$\int_0^{\pi/2} \cos^2 x\,dx = \int_0^{\pi/2} \sin^2 x = \frac{\pi}{4}.$$

$$I = \int_0^{\pi/2} \cos^2 x \, dx \qquad \ldots\ldots \qquad (1)$$

$$I = \int_0^{\pi/2} \cos^2 \left(\frac{\pi}{2} - x\right) dx$$

$$= \int_0^{\pi/2} \sin^2 x \, dx \qquad \ldots\ldots \qquad (2)$$

(1) + (2)

$$2I = \int_0^{\pi/2} (\sin^2 x + \cos^2 x) \, dx$$

$$= \int_0^{\pi/2} dx = \Big(x \Big)_0^{\pi/2} = \frac{\pi}{2}$$

$$\therefore \; I = \frac{\pi}{4}.$$

பயிற்சி 40

1. மதிப்புக் காண்: $\displaystyle\int_0^{\pi/2} \frac{\sin x}{\sin x + \cos x} \, dx$

2. $\displaystyle\int_0^{\pi/2} \frac{(\sqrt{\cos x})^3}{(\sqrt{\sin x})^3 + (\sqrt{\cos x})^3} = \frac{\pi}{4}$

3. $\displaystyle\int_0^{\pi} \frac{x \sin x}{1 + \cos^2 x} \, dx = \frac{\pi^2}{4}$

4. $\displaystyle\int_a^b f(x) \, dx = \int_a^b f(a+b-x) \, dx$ என நிரூபி.

5. $\int_0^{\pi/2} \log(\sin x)\, dx = \int_0^{\pi/2} \log(\cos x)\, dx$

$$= -\frac{\pi}{2}\log e^2$$

6. $\int_0^{\pi} \frac{x\,dx}{a^2\cos^2 x + b^2\sin^2 x} = \frac{\pi^2}{2ab}$

7. $\int_0^{\pi/2} \frac{\sin^2 x}{\sin x + \cos x}\, dx = \int_0^{\pi/2} \frac{\cos^2 x}{\cos x + \sin x}\, dx$

$$= \frac{1}{\sqrt{2}}\log(1+\sqrt{2})$$

8. $\int_0^{\pi/4} \log(1+\tan\theta)\, d\theta = \frac{\pi}{8}\log 2$


9. $\int_0^{1} \frac{\log(1+x)}{1+x^2}\, dx$ ன் மதிப்பைக் காண்க.

10. $\int_0^{\pi} \frac{x\tan x}{\sec x + \tan x}\, dx$

3. வரையறைத் தொகை பயன்படும் இடங்கள் (Applications of Definite Integrals)

வரையறைத் தொகைப் பரப்பு, வளைவரை நீளங்கள், உருளையின் பருமங்கள், உருளையின் புறப்பரப்பு முதலியவை களைக் கண்டுபிடிக்க உதவுகிறது.

3·1. பரப்புகள் (Areas).



படம் 12

படத்தில், $y=f(x)$ என்ற வளைவரை AB

$x=a$ ல் போடப்பட்ட குத்தாயம் AL

$x=b$ ல் போடப்பட்ட குத்தாயம் BM

Q வளைவரையில் ஏதாமொரு புள்ளி (x, y)

P அவ்வளைவரையில் மேலுள்ள, Q க்கு அண்மையிலுள்ள புள்ளி. P $(x+\triangle x, y+\triangle y)$ ஆகவிருக்கட்டும்.

படத்தில் $VT=\triangle x$; $RP=\triangle y$

பரப்பு ALVQ, x ஆயத்தொலையைச் சார்ந்தது, அதாவது VQ ஐச் சார்ந்தது.

எனவே, பரப்பு ALVQ $= F(x)$ எனக் கொள்வோம்.

பரப்பு ALTP $= F(x+\triangle x)$

பரப்பு PQVT $= F(x+\triangle x) - F(x)$

பரப்பு VTRQ $<$ பரப்பு VTPQ $<$ பரப்பு VTPS.

$$f(x) \cdot \triangle x < F(x+\triangle x) - F(x) < f(x+\triangle x) \cdot \triangle x$$

$$f(x) < \frac{F(x+\triangle x) - F(x)}{\triangle x} < f(x+\triangle x)$$

$\triangle x \to 0$ என்ற எல்லையை எடுத்தால்

$$f(x) < \underset{\triangle x \to 0}{\text{Lt}} \frac{F(x+\triangle x) - F(x)}{\triangle x} < \underset{\triangle x \to 0}{\text{Lt}} f(x+\triangle x)$$

$\therefore \quad f(x) = F'(x)$ ஆகிறது.

$$\therefore \quad F(x) = \int f(x)\, dx$$
$$= \phi(x) + c$$

$x=a$ ஆகக் கொண்டால், $F(a) = 0$

$$\therefore \quad O = \phi(a) + c$$

$$\therefore \quad C = -\phi(a)$$

$$\therefore \quad F(x) = \phi(x) - \phi(a)$$

$x=b$ எனக்கொண்டால்

$$F(b) = \phi(b) - \phi(a)$$
$$= \int_a^b f(x)\, dx$$

$$\therefore \quad \text{பரப்பு} = \int_a^b f(x)\, dx$$

ஆகவே $y=f(x)$ என்ற வளைவரையில் $x=a, x=b$ என்ற குத்தாயங்களுக்கும், x ஆயத்திற்கு மிடையேயுள்ள பகுதியின் பரப்பு $A = \int_a^b y\,dx$.

குறிப்புகள் :


(1) எல்லைகள் கொடுக்கப்படாவிடில் x ஆயம் ஒரு எல்லையாக அமைந்தால் (bounding axis), வளைவரையின் சமன்பாட்டையும், x ஆயத்தின் சமன்பாடாகிய $y = 0$ ஐயும் தீர்த்துக் கீழ் மேல் எல்லைகளைக் காணலாம்.

(2) y ஆயம், ஒரு எல்லையாக (bounding axis) ஆக அமைந்து, $x = f(y)$ வளைவரையின் சமன்பாடாகவிருந்து, $y = c, y = d$ தொகைக்குக் கீழ்மேல் எல்லைகளாகவிருந்தால்

$$\text{பரப்பு} = \int_c^d x\,dy.$$

மாதிரி 1.

$y^2 = 4ax$ என்ற வளைவரைக்கும் அதன் செவ்வகலத்திற்கு முள்ளே (latus rectum) இடைப்பட்ட பரப்பைக் காண்க.



படம் 13

வேண்டிய பரப்பு = OLSL′

= 2 . x பரப்பு OSL

$$A = 2\int_0^a y\,dx$$


$$= 2\int_0^a \sqrt{4ax}\,dx$$

$$= 4\sqrt{a}\,.\left(\frac{x^{3/2}}{\frac{3}{2}}\right)_0^a$$

$$= \frac{8a^2}{3}$$ ச. அலகுகள்.

மாதிரி 2.

$y^2 = 4ax$, $x^2 = 4ay$ என்ற இரு வளைவரைகளுக்குப் பொதுவாக உள்ள பரப்பைக் காண்க.



படம் 14

இவ்விரண்டு வளைவரைகளும் P என்ற புள்ளியில் வெட்டட்டும். $y^2 = 4ax$, $x^2 = 4ay$ என்ற சமன்பாடுகளைத் தீர்க்க,

$$\frac{x^4}{16a^2} = 4ax$$

$$x^4 - 64a^3 x = 0$$

$$x(x^3 - 64a^3) = 0$$

$$x = 0 \text{ அல்லது } x = 4a.$$

பொதுவாக உள்ள பரப்பு


$$= \int_0^{4a} \sqrt{4ax}\, dx - \int_0^{4a} \frac{x^2}{4a}\, dx$$

$$= 2\sqrt{a} \cdot \left(\frac{x^{3/2}}{\frac{3}{2}}\right)_0^{4a} - \frac{1}{4a}\left(\frac{x^3}{3}\right)_0^{4a}$$

$$= \frac{32a^2}{3} - \frac{16a^2}{3} = \frac{16a^2}{3} \text{ ச. அ.}$$

மாதிரி 3.

$ay^2 = x^2(a - x)$ என்ற வளைவரை ஏற்படுத்தும் வளையத்தின் பரப்பைக் காண்க.



படம் 15

வளைவரையில், y க்கு $-y$ போட்டால், மாறுதல் இல்லை. ஆகவே வளைவரை x அச்சுக்குச் சமச்சீர் பெற்றதாகவிருக்கும். $y = 0$ வுடன் வளைவரையின் சமன்பாட்டைத் தீர்த்தால் $x = 0$

$x=a$, என்ற x-ஆயத் தொலைகளைப் பெற்ற புள்ளிகளில் வளைவரை x அச்சைக் கடந்து வளையத்தை ஏற்படுத்துகிறது.

$$\text{வளையத்தின் பரப்பு} = 2\int_0^a y\,dx$$

$$= 2\int_0^a x\sqrt{\frac{a-x}{a}}\,dx$$

$$= \frac{2}{\sqrt{a}}\int_0^a x\sqrt{a-x}\,dx$$

$a - x = u^2$ என்க.

$-dx = 2u\,du.$

$$= \frac{2}{\sqrt{a}}\int (a-u^2)\,.\,u\,(-2u\,du)$$

$$= \frac{2}{\sqrt{a}}\int_{\sqrt{a}}^{0} -2u^2(a-u^2)\,du$$

$$= \frac{4}{\sqrt{a}}\int_0^{\sqrt{a}} (u^2\,.\,a-u^4)\,du$$

$$= \frac{4}{\sqrt{a}}\left[a\,.\left(\frac{u^3}{3}\right) - \frac{u^5}{5}\right]_0^{\sqrt{a}}$$

$$= \frac{4}{\sqrt{a}}\left[a\,.\,\frac{a^{3/2}}{3} - \frac{a^{5/2}}{5}\right]$$

$$= \frac{4}{\sqrt{a}}\left[\frac{5a^{5/2} - 3a^{5/2}}{15}\right]$$

$$= \frac{8a^{5/2}}{\sqrt{a}\,.\,15} = \frac{8a^2}{15}\ \text{ச. அலகுகள்.}$$

பயிற்சி 41

1. கீழ்க் காணும் வளைவரைகளில் ஏற்படும் வளையங்களின் பரப்பைக் காண்க.

(i) $y^2 = x^2 (2 - x)$

(ii) $y^2 = (x + 1)(x - 2)^3$

(iii) $2y^2 = (1 - x)(1 + 2x)^2$

(iv) $y^2 + 4x^4 - 4x^2 = 0$

(v) $9y^2 = x(3 - x)^2$

2. $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ என்ற நீள் வட்டத்தின் பரப்பைக் காண்க.

3. x அச்சுக்கும், $y = \sin x$ என்ற வளைவரைக்கும் இடையே ஏற்படும் ஒரு முழுவில்லின் பரப்பைக் காண்க.

4. $y^2 = 2x$, $x^2 = 3y$ என்ற இரு பரவளையத்திற்குப் பொதுவாக உள்ள பரப்பைக் காண்க.

5. $y^2 = 4x$ என்ற பரவளையத்திற்கும் $y = 2x - 4$ என்ற கோட்டிற்கும் இடையே உள்ள பரப்பைக் காண்.

6. $(y-1)^2 = 4x$, $x^2 = 4(y-1)$ என்ற இரு பரவளையத்திற்கும் பொதுவாக உள்ள பரப்பைக் காண்க.

7. $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ நீள் வட்டத்தில், $x = c$ என்ற நேர் கோட்டினுல் பிரிக்கப்பட்ட இரு பகுதிகளின் பரப்பைக் காண்க.

8. $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ நீள் வட்டத்தில், $y = c$ என்ற நேர் கோட்டால் பிரிக்கப்படும் இரு பகுதிகளின் பரப்பைக் காண்க.

9. $y^2 = 4a(x+a)$, $y^2 = 4b(b-x)$ என்ற இரு பரவளையத்திற்குப் பொதுவாக உள்ள பரப்பு $\frac{8}{3}(a + b) . \sqrt{ab}$ எனக் காண்க.

10. $\frac{x^2}{a^2}+\frac{y^2}{b^2}=1$, $\frac{x^2}{b^2}+\frac{y^2}{a^2}=1$ என்ற இரு நீள்வட்டங்களுக்குப் பொதுவாக உள்ள பரப்பைக் காண்க.

11. $y(x^2+4a^2)=8a^3$ என்ற வளைவரைக்கும் அதன் ஈற்றணுகிக்கும் இடைப்பட்ட பரப்பைக் காண்க.

3·2 சுற்றுதலால் அடையப்பெறும் திடப்பொருள் (volume of solid of revolution).

இரண்டு குத்தாயங்களால் அடைபட்ட ஒரு வளைவரையின் பகுதி (படம் 12), x அச்சை ஒரு சுற்று சுற்றினுல், ஓர் உருளை ஏற்படும். அவ்வுருளையின் பருமத்தைக் காண முற்படுகிறோம்.

படத்தில் PQVT என்ற பகுதி x அச்சைச் சுற்றுவதால், நுண் பகுதிப்பருமம் $= \pi y^2 \cdot \triangle x$.

சுற்றும் பரப்பு $x=a$, $x=b$ என்ற இரு குத்தாயங்களுக்கிடையே அடைபட்டுள்ளது.

$$\therefore \text{ பருமம் } = \int_a^b \pi y^2 \, dx$$


$$= \pi \int_a^b y^2 \, dx \text{ க. அ.}$$

குறிப்பு: y அச்சை, குறிப்பிட்ட பரப்பு அதாவது $y=c$, $y=d$ நெட்டாயங்களுக்கிடையே வளைவரைக்குட்பட்டுள்ள பரப்பு சுற்றினுல்

$$\text{பருமம்} = \pi \int_c^d x^2 \, dy \text{ க. அ.}$$

மாதிரி 1.

ஆய ஆதி முதல் $x=a$ என்ற குத்தாயம் வரை x அச்சுக்கும், $y^2=4ax$ க்கும் இடைப்பட்ட பரப்பு, x அச்சை ஒரு முறை சுற்றுகிறது. சுற்றுதலால் அடையப்பெறும் திடப் பொருளின் பருமம் காண்க.



படம் 16

$$V = \pi \int_a^b y^2\, dx$$


$$= \pi \int_0^a 4ax\, dx$$

$$= 4a\pi \cdot \left(\frac{x^2}{2}\right)_0^a$$

$$= \overset{2}{\cancel{4}}a\pi \cdot \frac{a^2}{\cancel{2}} = 2\pi a^3 \text{ க. அ.}$$

மாதிரி 2.

$y^2 = x^4\,(x+2)$ என்ற வளைவரையில் ஏற்படும் வளையம் x அச்சைச் சுற்றினல் உண்டாகும் சுற்றுதலால் அடையப் பெறும் திடப்பொருளின் பருமம் என்ன ?



படம் 17

$$V = \pi \int_a^b y^2 \, dx$$

$$= \pi \int_{-2}^{0} x^4 (x+2) \, dx$$

$$= \pi \int_{-2}^{0} (x^5 + 2x^4) \, dx$$

$$= \pi \left[\frac{x^6}{6} + \frac{2x^5}{5} \right]_{-2}^{0}$$

$$= \frac{32\pi}{15} \text{ க. அலகுகள்.}$$

மாதிரி 3.

$x = t^2,\ y = t - \dfrac{t^3}{3}$ என்ற வளைவரையில் ஏற்படும் வளையம் x அச்சை ஒரு சுற்று சுற்றினல் ஏற்படும் திடப்பொருளின் பருமம் காண்க.

x அச்சைச் சுற்றுகிறது. எல்லைகளைக் காண,

$$y = 0,\ y = t - \frac{t^3}{3}$$

என்ற சமன்பாடுகளைத் தீர்ப்போம்.

$$t - \frac{t^3}{3} = 0$$

$$3t - t^3 = 0$$

$$t(3 - t^2) = 0$$

$$t = 0,\ \sqrt{3}.$$

$$V = \pi \int_0^{\sqrt{3}} y^2 \, dx$$

$$= \pi \int_0^{\sqrt{3}} \left(t - \frac{t^3}{3}\right)^2 . \frac{dx}{dt} . dt$$

$$= \pi \int_0^{\sqrt{3}} \left(t - \frac{t^3}{3}\right)^2 . 2t . dt$$

$$= \pi \int_0^{\sqrt{3}} \left(t^2 + \frac{t^6}{9} - \frac{2t^4}{3}\right) 2t\, dt$$

$$= \frac{2\pi}{9} \int_0^{\sqrt{3}} (9t^2 + t^6 - 6t^4)\, t\, dt$$

$$= \frac{2\pi}{9} \left[9 . \frac{t^4}{4} + \frac{t^8}{8} - 6 . \frac{t^6}{6}\right]_0^{\sqrt{3}}$$

$$= \frac{2\pi}{9} \left[\frac{81}{4} + \frac{81}{8} - 27\right]$$

$$= \frac{2\pi}{9} \left[\frac{162 + 81 - 216}{8}\right]$$

$$= \frac{2\pi}{9} \left[\frac{27}{8}\right]$$

$$= \frac{3\pi}{4} \text{ க. அ.}$$

பயிற்சி 42

1. ஒரு கோளத்தின் பருமமும், ஒரு வட்ட மட்ட (right circular) கூம்பின் பருமமும் காண்க.

2. $y = \sin x$ ன் ஒரு முழுவில் x அச்சை ஒரு சுற்று சுற்றினால் ஏற்படும் திடப்பொருளின் பருமம் என்ன ?

3. ஒரு கோளத்தின் பகுதி வெட்டப்பட்டது. உயரம் h. அதன் வட்ட மட்டத்தின் அரை விட்டம் c. அதன் பருமம் $\frac{\pi h}{6}(3c^2 + h^2)$ என நிறுவுக.

4. கீழ்க்கண்ட பரப்பு x அச்சை ஒரு சுற்று சுற்றினால் ஏற்படும் திடப்பொருளின் பருமம் காண்க.

(i) $x = a(\theta - \sin\theta)$; $y = a(1 - \cos\theta)$ ஒரு முழுவில்.

(ii) $y^2(a + x) = x^2(3a - x)$, வளையம்.

5. முதல் நாற் கூறிலுள்ள, நாற் கூர் விண்மீன் $x = a\cos^3 t$, $y = a\sin^3 t$, x அச்சை ஒரு சுற்று சுற்றி வரும் பொழுது ஏற்படும் திடப்பொருளின் பருமம் என்ன?

6. $4x^2 + 9y^2 = 36$ என்ற நீள் வட்டம், x அச்சைச் சுற்றினால் பெறப்படும் திடப்பொருளின் பருமம் என்ன?

7. $\frac{x^2}{9^2} + \frac{y^2}{6^2} = 1$ என்ற நீள் வட்டம், y அச்சை ஒரு சுற்று சுற்றினால் ஏற்படும் திடப்பொருளின் பருமம் என்ன?

8. பரவளையத்தில் செவ்வகலத்தால் துண்டிக்கப்பட்ட பகுதி (i) செவ்வகலத்தைச் சுற்றி (ii) பரவளையத்தின் அச்சைச் சுற்றி வருகையில் ஏற்படும் திடப்பொருளின் பருமங்களைக் காண்க.

3·3. சுற்றுதலால் அடையப்பெறும் திடப் பொருளின் புறப் பரப்பு (Surface area of solid of revolution).

படம் (12) பார்க்கவும். படத்தில் PQ என்ற வில், x அச்சைச் சுற்றும்பொழுது

நுண்பகுதிப் பரப்பு $= 2\pi y \,.\, \triangle s$ ஆகும்.

$$\text{முழுப்புறப்பரப்பு} = \int 2\pi y \,.\, ds$$

$$= \int 2\pi y \frac{ds}{dx} \,.\, dx$$

$$= 2\pi \int y \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \, . \, dx$$

$$= 2\pi \int_a^b y \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \, . \, dx$$

மாதிரி 1.

$x^2+y^2=a^2$ என்ற வட்டம், x அச்சைச் சுற்றுவதால் ஏற்படும் திடப்பொருளின் புறப்பரப்புக் காண்க.

$$S = 2\pi \int_{-a}^{+a} y \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \, . \, dx$$

$$= 2\pi \times 2 \int_0^a y \sqrt{1 + \frac{x^2}{y^2}} \, dx$$

$$= 4\pi \int_0^a a \, . \, dx$$

$$= 4\pi a \, (x)_0^a$$

$$= 4\pi a^2 \text{ ச. அலகுகள்}$$

பயிற்சி 43

1. பின் குறிப்பிட்ட வளைவரைகள் x அச்சை ஒருமுறை சுற்றினால் ஏற்படும் திடப்பொருள்களின் புறப்பரப்பு காண்க.

(i) $3ay^2 = x(x-a)^2$ – ஒரு வளையம்

(ii) $y^2 = 4ax$, $x=0$ முதல் $x=a$ வரை.

(iii) $y = c \cosh \dfrac{x}{c}$, $x=0$ முதல் $x=c$ வரை

(iv) $x = a(\theta - \sin\theta)$, $y = a(1-\cos\theta)$ – முழுவில்

2. $x = t^2, y = t - \frac{t^3}{3}$ என்ற வளைவரையில் அமையும் வளையம் x அச்சை ஒரு சுற்று சுற்றினால் ஏற்படும் திடப் பொருளின் புறப்பரப்பு 3π எனக் காண்க.

3·4. வளைவரையின் நீளங்கள் (Lengths of curves).

படம் (12) பார்க்கவும். PQ வளைவரையின் நுண்பகுதி $= \triangle S$.

$\therefore$ வளைவரையின் நீளம் $= \int ds$

(உரிய எல்லைகளுக்கிடையில்)

$$= \int \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \, . \, dx \, . \qquad ,,$$

வளைவரையின் சமன்பாடு, 'θ' அல்லது 't' என்ற மாறியின் வாயிலாகக் கொடுக்கப்பட்டால், அதாவது $x = f(t)$ $y = \phi(t)$ என்பதானால்,

$$\text{வளைவரையின் நீளம்} = \int \sqrt{\left(\frac{dx}{dt}\right)^2 + \left(\frac{dy}{dt}\right)^2} \, dt$$

உரிய எல்லைகளுக்கிடையில் தொகை காணவேண்டும்.

மாதிரி 1.

$x = 0, x = \frac{\pi}{3}$ என்ற எல்லைகளுக்குள் $y = \log \cos x$ என்ற வளைவரையின் நீளத்தைக் காண்க.

$$y = \log \cos x$$

$$\frac{dy}{dx} = -\tan x$$

$$\frac{ds}{dx} = \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} = \sqrt{1 + \tan^2 x} = \sec x$$

$$\text{வில்லின் நீளம்} = \int_0^{\pi/3} \sec x \, dx$$

$$= [\log(\sec x + \tan x)]_0^{\pi/3}$$

$$= \log(2+\sqrt{3})$$

மாதிரி 2.

$x = e^{\theta} \sin\theta,\ y = e^{\theta}\cos\theta$ என்ற வளைவரையில் $\theta = 0$ முதல் $\theta = \frac{\pi}{2}$ என்ற எல்லைகளுக்குள் அமையும் வில்லின் நீளத்தைக் காண்க.

$$x = e^{\theta}\sin\theta\,;\ \frac{dx}{d\theta} = e^{\theta}\cos\theta + e^{\theta}\sin\theta$$

$$y = e^{\theta}\cos\theta,\ \frac{dy}{d\theta} = e^{\theta}(-\sin\theta) + e^{\theta}\cos\theta$$

$$\frac{ds}{d\theta} = \sqrt{\left(\frac{dx}{d\theta}\right)^2 + \left(\frac{dy}{d\theta}\right)^2} = \sqrt{2\,(e^{2\theta}\cos^2\theta + e^{2\theta}\sin^2\theta)}$$

$$= \sqrt{2}\,.\,e^{\theta}$$

$$\text{வில்லின் நீளம்} = \int_0^{\pi/2} \frac{ds}{d\theta}\,.\,d\theta = \sqrt{2}\int_0^{\pi/2} e^{\theta}\,d\theta$$

$$= \sqrt{2}\,(e^{\pi/2} - 1)$$

பயிற்சி 44

1. $y = \log\sec x$ என்ற வளைவரையில் $x = 0$ முதல் $x = \pi/3$ வரை அமையப்பெறும் வில்லின் நீளத்தைக் காண்க.

2. $4y^2 = (x+2)^3$ என்ற வளைவரையில் $x = 2$ முதல் $x = 7$ வரை உள்ள வில்லின் நீளத்தைக் காண்க.

3. $9ay^2 = x\,(x - 3a^2)$ என்ற வளைவரையின் வளையத்தின் நீளத்தைக் காண்க.

4. $3ay^2 = x(x-a)^2$ என்ற வளைவரையின் வளையத்தின் நீளத்தைக் காண்க.

5. $x^3 = y^2$ என்ற வளைவரையில் $x=0$ முதல் $x=1$ என்ற எல்லைகளுக்குள் அமையப்பெறும் வில்லின் நீளத்தைக் காண்க.

6. நாற்கூர் விண்மீன் $x = a\cos^3 t$, $y = a\sin^3 t$ ன் முழு நீளத்தைக் காண்க.

7. $\theta = 0$ முதல் $\theta = \pi$ என்ற எல்லைக்குள் அடங்கிய வில்லின் நீளம் காண்க. வளைவரையின் சமன்பாடு

$$x = a(\cos\theta + \theta\sin\theta)$$

$$y = a(\sin\theta - \theta\cos\theta)$$ எனக் கொள்க.

4. புவிஈர்ப்பு மையம்
(Centre of gravity)

புவிஈர்ப்பு மையத்தை $\bar{x}$, $\bar{y}$ என்று நிலைப்பொருளியலில் பெயரிட்டு,

$$\bar{x} = \frac{\sum_{r=1}^{n} m_r \, x_r}{\sum_{r=1}^{n} m_r}$$


$$\bar{y} = \frac{\sum_{r=1}^{n} m_r \, . \, y_r}{\sum_{r=1}^{n} m_r}$$ எனவும் கண்டோம்.

இங்கு $m_1, m_2, \ldots\ldots m_n$ என்பவை தனித்தனிப் பொருள்களாக விறைப்பாக இணைக்கப்பட்ட ஒரு பொருண்மை கூட்டம். அவைகள் தனித்தனிப் பொருண்மைகளாக வல்லாமல் தொடர்ச்சியான பரப்பு, பருமம், புறப்பரப்பு, நீளம் உள்ள ஒரே பொருண்மையாக இருக்குமானால், Σ என்பது $\int$, வரையறுத்த தொகையாகக் கொள்ளப்படும்.

ஆகவே, $\bar{x} = \dfrac{\int x \, dm}{\int dm}$ (குறிப்பிட்ட எல்லைகளுக்குள்)

$$\bar{y} = \frac{\int y \, dm}{\int dm}$$

பு. ஈ. மையம் காணும் முறை :



படம் 18

$x = a$, $x = b$ குத்தாயக் கோடுகளுக்கும் x அச்சுக்கும், $y = f(x)$ என்ற வளைவரைக்கும் இடைப்பட்ட பரப்பு PQRS. RS வளைவரை கோட்டின் நீளம்.

(i) பரப்பு PQRS ன் பு. ஈ. மையம் $(\bar{x}, \bar{y})$

நுண்பகுதிப் பரப்பு $= y \cdot \triangle x$.

நுண் பகுதிப் பொருண்மை $= P \cdot y \cdot \triangle x = \triangle m$.

நுண் பொருண்மையின் பு. ஈ. மையம் $\left\} \begin{array}{l} x = x \\ y = \dfrac{y}{2} \end{array}\right.$

$$\therefore \quad \bar{x} = \frac{\int_a^b xy \, P \cdot dx}{\int_a^b y \, P \, dx}$$

$$\bar{y} = \frac{\int_a^b \cdot \frac{y}{2} \cdot y \cdot P \, dx}{\int_a^b \cdot y \, P \, dx}$$

(ii) பரப்பு PQRS, x அச்சை ஒரு சுற்று சுற்றினல் பெறப்படும் உருளைப் பருமத்தின் பு. ஈ. மையம்:

நுண் பகுதிப் பருமம் $= \pi y^2 \,.\, \triangle x.$

நுண் பகுதிப் பொருண்மை $= P \,.\, \pi y^2 \,.\, \triangle x = \triangle m.$

நுண் பகுதிப் பொருண்மையின் பு. ஈ. மையம் $\left.\right\}$ $x = x$, $y = 0.$

(உருளையின் பருமம் x–அச்சுக்குச் சமச்சீர் பெற்றது).

$$\therefore \quad \bar{x} = \frac{\int_a^b \pi y^2 \,.\, dx \,.\, P \,.\, x}{\int_a^b \pi y^2 \, dx \,.\, P}$$

$$\bar{y} = 0.$$

(iii) பரப்பு PQRS, x அச்சை ஒரு சுற்று சுற்றினல் பெறப்படும் உருளையின் புறப்பரப்பு :

நுண் பகுதிப் புறப் பரப்பு $= 2\pi y \,.\, \triangle s$

நுண் பகுதிப் பொருண்மை $= 2\pi y \, P \,.\, \triangle s$

நுண் பகுதிப் பொருண்மையின் பு. ஈ. மையம் $\left.\right\}$ $x = x$, $y = 0.$

$$\therefore \quad \bar{x} = \frac{\int_a^b 2\pi y \,.\, x \, P \,.\, ds}{\int_a^b 2\pi y \, P \, ds}$$

$\bar{y} = 0.$ ($\because$ x அச்சுக்குச் சமச்சீர் பெற்றுள்ளது).

(iv) வளைவரை நீளம் RS.

நுண் பகுதி நீளம் $= \triangle s$

நுண் பகுதிப் பொருண்மை $= P \triangle S$

நுண் பகுதிப் பொருண்மையின் பு. ஈ. மையம் $\left.\right\}$ $x = x$, $y = y$

$$\bar{x} = \frac{\int_a^b . x \, P \, ds}{\int_a^b P \, ds}$$

$$\bar{y} = \frac{\int_a^b y \, P \, ds}{\int_a^b P \, ds}$$

மாதிரி 1.

$y^2 = 4ax$ என்ற பரவளையம், x அச்சு, செவ்வகலம் இவைகளுக்கிடையே அமைந்துள்ள பரப்பின் புவி ஈர்ப்பு மையம் காண்க:

x அச்சுக்குச் சமச்சீர் பெற்றிருப்பதால் பு. ஈ. மையம் x அச்சின் மேல் அமையும். ஆகவே $\bar{y} = 0$.

$$\bar{x} = \frac{\int_0^a x \, y \, dx}{\int_0^a y dx} \quad [\text{ P ஒரு மாறிலி }]$$

$$= \frac{\int_0^a x \, . \sqrt{4ax} \, . \, dx}{\int_0^a \sqrt{4ax} \, dx}$$

$$= \frac{\int_0^a x^{3/2} \, dx}{\int_0^a x^{1/2} \, dx} = \frac{\left(\frac{x^{5/2}}{\frac{5}{2}}\right)_0^a}{\left(\frac{x^{3/2}}{\frac{3}{2}}\right)_0^a}$$

$$= \frac{3a}{5}$$

$\therefore$ புவி ஈர்ப்பு மையம் $= \left(\frac{3a}{5}, 0\right)$.

மாதிரி 2.

அரைக் கோளப் பருமத்தின் புவி ஈர்ப்பு மையமும், அரைக் கோளத்தின் புறப்பரப்பின் புவி ஈர்ப்பு மையமும் காண்க.

$x^2 + y^2 = a^2$ என்ற வட்டத்தின் கால் பகுதியை அதை அடக்கும் ஆரையை அச்சாக வைத்துச் சுற்றினல் அரைக் கோளம் கிடைக்கும்.

(i) அரைக்கோளப் பருமத்தின் பு. ஈ. மையம்.

$$\bar{x} = \frac{\int_0^a \pi y^2\, dx}{\int_0^a y^2\, dx} = \frac{\int_0^a x\,(a^2 - x^2)\, dx}{\int_0^a (a^2 - x^2)\, dx}$$

$$= \frac{\left[a^2 \cdot \frac{x^2}{2} - \frac{x^4}{4}\right]_0^a}{\left[a^2 x - \frac{x^3}{3}\right]_0^a} = \frac{3a}{8}$$

$\bar{y} = 0.$

$\therefore$ புவி· ஈமையம் $= \left(\frac{3a}{8}, 0\right)$

(ii) அரைக் கோளப் புறப் பரப்பின் பு. ஈ. மையம் :

வட்டக் கால்பகுதியின் வில் x அச்சை ஒரு சுற்று சுற்றினல் அரைக் கோளத்தின் புறப் பரப்பு (உள்ளீடற்ற அரைக் கோளம்) கிடைக்கும்.

$$\bar{x} = \frac{\int xy\, ds}{\int y\, ds}.$$

$$x = a\cos\theta, \quad y = a\sin\theta, \quad ds = a\,d\theta.$$

$$\bar{x} = \frac{\int_0^{\frac{1}{2}\pi} a\cos\theta \,.\, a\sin\theta \,.\, a\,d\theta}{\int_0^{\pi/2} a\sin\theta \cdot a\,d\theta}$$

$$= a\,.\,\frac{\left[\frac{\sin^2\theta}{2}\right]_0^{\pi/2}}{\left[-\cos\theta\right]_0^{\pi/2}} = \frac{a}{2}$$


$$\bar{y} = 0.$$

∴ பு. ஈ. மையம் $= \left(\frac{a}{2}, 0\right)$

மாதிரி 4.

வட்டமட்டக் கூம்பின் பருமத்தின் புவி ஈர்ப்பு மையமும், வட்டமட்டக் கூம்பின் புறப் பரப்பின் புவி ஈர்ப்பு மையமும் காண்க.

(i) வட்டமட்டக் கூம்பின் பருமத்தின் புவி ஈர்ப்பு மையம்.



படம் 19

OAB என்பது ஒரு செங்கோண முக்கோணம். $AB = r$; $OA = h$. OAB என்ற பரப்பு x அச்சைச் சுற்றினுல் வட்டமட்டக் கூம்பின் பருமம் கிடைக்கும்.

OB ன் சமன்பாடு $y = \frac{r}{h} . x.$

$$\bar{x} = \frac{\int_0^h xy^2\, dx}{\int_0^h y^2\, dx} = \frac{\int_0^h x^3\, dx}{\int_0^h x^2\, dx} = \frac{3}{4} h.$$

$$\bar{y} = 0.$$

$$\text{பு. ஈ. மையம்} = \left(\frac{3h}{4}, 0\right)$$

(ii) உள்ளீடற்ற கூம்பு OB என்ற நேர்கோடு x அச்சைச் சுற்றுவதால் ஏற்படும்.

OB ன் சமன்பாடு $y = \frac{r}{h} . x.$

$$\bar{x} = \frac{\int xy\, ds}{\int y\, ds}$$

$$\left(\frac{ds}{dx}\right)^2 = 1 + \left(\frac{dy}{dx}\right)^2 = 1 + \left(\frac{r}{h}\right)^2$$

$$\bar{x} = \frac{\int_0^h x . \frac{r}{h} . x . \sqrt{1 + \frac{r^2}{h^2}} . dx}{\int_0^h \frac{r}{h} . x . \sqrt{1 + \frac{r^2}{h^2}} . dx}$$

$$= \frac{\int_0^h . x^2\, dx}{\int_0^h x\, dx} = \frac{\frac{h^2}{3}}{\frac{h^2}{2}}$$

$$= \frac{2h}{3}.$$

$$\bar{y} = 0.$$

$$\therefore \quad \text{பு. ஈ. மையம்} = \left(\frac{2h}{3}, 0\right)$$

பயிற்சி 45

1. $y = c \cosh \frac{x}{c}$ என்ற கயிற்று வளையத்தில் ஆதிமுதல் (x, y) என்ற புள்ளிவரை உள்ள வில்லின் புவி ஈர்ப்புமையம் காண்க.

2. $x^{2/3} + y^{2/3} = a^{2/3}$ என்ற வளைவரையில் முதற்கால் பகுதியிலுள்ள வில்லின் புவி ஈர்ப்பு மையத்தைக் காண்க.

3. 'a' ஆரையுள்ள அரைவட்டப் பரப்பின் புவி ஈர்ப்பு மையத்தைக் காண்க.

4. $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ என்ற நீள்வட்டத்தில் கால்பகுதியின் பரப்பின் புவி ஈர்ப்பு மையத்தைக் காண்க.

5. $y^2 = 4x^2 - x^3$ என்ற வளைவரையில் வளையத்தின் பரப்பின் புவி ஈர்ப்பு மையத்தைக் காண்க.

6. $y = \sin x$ ன் ஒரு முழுவில்லின் பரப்பின் புவி ஈர்ப்பு மையம் காண்க.

7. உருள்வளை $x = a(\theta - \sin\theta)$, $y = a(1 - \cos\theta)$ இதன் பரப்பின் பு. ஈ. மையம் காண்க.

8. $y^2 = 2ax$, $x = 0$, $x = a$ இடைப்பட்ட பரப்பு, x அச்சை ஒரு சுற்று சுற்றுகிறது. உருளையின் பு. ஈ. மையம் காண்க.

9. $y = a \sin x$, $x = 0$, $x = \frac{\pi}{2}$ இவைகளின் இடைப்பட்ட பரப்பு x அச்சைச் சுற்றி வருகையில் ஏற்படும் உருளையின் பு. ஈ. மையம் காண்க.

5. நிலைமதிருப்பத்திறன்

(Moment of Inertia)

5·1. வரையறை: m பொருண்மையுள்ள ஒரு நுண் பொருள், ஒரு கொடுக்கப்பட்ட நேர் கோட்டிலிருந்து 'r' தூரம் இருக்குமானால் அக்கோட்டை யொட்டி அந்நுண் பொருளின் நிலைமதிருப்பத்திறன் mr^2 என்பது வரையறை.

பலநுண்பொருள்கள் கூட்டமாகிய ஒரு பொருளை யெடுத்துக் கொண்டால் Σmr^2 ஒரு வரையறைப்பட்ட தொகை (Definite Integral) ஆகும். $\triangle$M ஒரு நுண்பகுதிப் பொருண்மை.

$$\therefore \quad \Sigma mr^2 = \Sigma \triangle M \cdot r^2$$
$$= \int r^2 \, dM.$$

(உரிய எல்லைகளுக்குட்பட்டது)

பொதுவாக, OX என்பது ஒரு குறிப்பிட்ட அச்சாகி, M என்ற பொருண்மையின் நிலைம திருப்பத்திறன் MK^2 ஆகும். K என்பது அந்த அச்சையொட்டி அப்பொருளின் சுழியாரை (radius of gyration) எனச் சொல்வார்கள்.

சில முக்கிய குறிப்புகள் :

(i) நாம் கம்பியின் நிலைம திருப்பத்திறன் கண்டுபிடிக்குங்காலையில், நுண்பகுதிப் பொருண்மை = $\triangle x$. P. இங்கு P செறிவை அல்லது அடர்த்தியைக் குறிக்கும். $\triangle x$ நுண்பகுதி நீளத்தைக் குறிக்கும்.


(ii) ஒரு பரப்பின் நிலைம திருப்பத்திறன் காணும் காலையில், நுண்பகுதிப் பொருண்மை = $y \cdot \triangle x \cdot P$. இங்கு $y\triangle x$ x அச்சை ஒட்டி ax, $x+\triangle x$ குத்தாயங்களுக்கிடையே உள்ள நுண்பகுதிப் பரப்பைக் குறிக்கும்.

(iii) உருளைப் பருமத்தின் நிலைம திருப்பத்திறன் காணும் காலையில், நுண்பகுதிப் பொருண்மை = $\pi y^2 \triangle x \cdot P$.

(iv) உருளையின் புறப்பரப்பின் நிலைம திருப்பத்திறன் காணும் காலையில் நுண்பகுதிப் பொருண்மை = $2\pi y \triangle S$.

மாதிரி 1.

ஒரு நேர்க்கம்பி நீளம் $2a$. பொருண்மை M. அச்சு கம்பியின் மையத்தின் வழியாக கம்பிக்குச் செங்குத்தானது. அவ்வச்சை ஒட்டி நிலைம திருப்பத்திறன் காண்க.



படம் 20

கம்பியின் மையப்புள்ளியே ஆதியாகும். நுண்பகுதிப் பொருண்மை = $\triangle x \cdot P$

நுண்பகுதிப் பொருண்மையின் OY ஐ ஒட்டி நிலைம திருப்பத்திறன் $\Big\}= \triangle x \cdot P \cdot x^2$

கம்பியின் மொத்த பொருண்மையின் OY ஐ ஒட்டி நிலைம திருப்பத்திறன் $\Big\}= \sum x^2 P \cdot \triangle x$

$$= \int_{-a}^{+a} x^2 P \cdot dx$$

$$= \frac{2}{3} \cdot a^3 P.$$

M கம்பியின் மொத்த பொருண்மை ஆனல் $M = 2a P$.

$$\text{OY ஐ ஒட்டி கம்பியின் நிலைம திருப்பத்திறன்} = \frac{M \cdot a^2}{3}$$

குறிப்பு: மேலே குறிக்கப்பட்ட மாதிரிக் கணக்கில், அச்சு கம்பியின் ஒரு முனை வழியாகக் கம்பிக்குச் செங்குத்தாக அமைந்தால், அவ்வச்சையொட்டி நிலைம திருப்பத்திறன் காண்க.

இங்கு $AP = x$ எனக் கொள்க.

$$\text{நி. தி. தி.} = P \int_0^{2a} x^2\, dx$$


$$= P \cdot \frac{8a^3}{3}$$

$$= \frac{M}{2a} \cdot \frac{8a^3}{3}$$

$$= \frac{4\, Ma^2}{3}$$

மாதிரி 2.

நீள் வட்ட வடிவமுள்ள தகட்டின் நெட்டச்சை ஒட்டி நிலைம திருப்பத்திறன் காண்க.



படம் 21

நீள் வட்டத்தின் சமன்பாடு $\frac{x^2}{a^2}+\frac{y^2}{b^2}=1.$

O விலிருந்து x தூரத்தில் நுண் பகுதியிருக்கட்டும்.

நுண்பகுதியின் பொருண்மை $= 2y \,.\, \triangle x \,.\, \mathrm{P}.$

OX ஐ ஒட்டி நி. தி. தி. $= 2y \,.\, \triangle x \,.\, \mathrm{P} \,.\, \frac{y^2}{3}$

OX ஐ ஒட்டி தகட்டின் நி. தி. தி. $= \frac{2}{3}\,\mathrm{P}\int_{-a}^{+a} y^3\, dx.$

$$= \frac{2}{3}\,\mathrm{P} \,.\, 2\int_0^a y^3\, dx$$

$$x = a\cos\theta\,; \quad y = b\sin\theta$$

$$= \frac{4}{3}\,\mathrm{P}\, ab^3 \int_0^{\pi/2} \sin^4\theta\, d\theta$$

$$= \frac{4}{3}\,\mathrm{P}\, ab^3 \,.\, \frac{3}{4} \,.\, \frac{1}{2} \,.\, \frac{\pi}{2}$$

$$= \mathrm{M} \,.\, \frac{b^2}{4} \quad [\because \quad \mathrm{M} = \pi ab\, \mathrm{P}].$$

குறிப்பு :

(1) குட்டச்சை ஒட்டி நீள் வட்டத் தகட்டின் நி. தி. தி. $= \frac{\mathrm{M}a^2}{4}$

(2) ஆரை 'a' உடைய வட்டவடிவமான தகட்டின் அதன் விட்டத்தை ஒட்டிய நி. தி. தி. $= \frac{\mathrm{M}a^2}{4}$

கவனிப்புக்குரிய இரு முக்கிய தேற்றங்கள் :

தேற்றம் 1 : ஒரு போகு அச்சுத் தேற்றம் (Theorem of Parallel Axes) : ஏதாமொரு அச்சை ஒட்டி ஒரு விறைப்பான பொருளின் நிலைமத் திருப்பத்திறன் = புவி ஈர்ப்பு மையத்தின் வழியாகச் செல்லும், அச்சின் ஒரு போகுக் கோட்டை ஒட்டிக் கணிக்கப்படும் நிலைம திருப்பத்திறன் + கொடுக்கப்பட்ட

அச்சை ஒட்டி புவி ஈர்ப்பு மையத்தின் வைக்கப்பட்ட பொருளின் நிலைம திருப்பத்திறன் ஆகும்.

எடுத்துக்காட்டாக,

$2a$ நீளமுள்ள ஒரு கம்பியின், அதன் ஒரு நுனியில் அதன் நீளத்திற்குச் செங்குத்தாகவுள்ள கோட்டை ஒட்டி அதன் நிலைமதிருப்பத்திறன்

$$= M \cdot \frac{a^2}{3} + Ma^2$$

$$= M \cdot \frac{4a^2}{3}$$

தேற்றம் 2 : செங்குத்தச்சுகள் தேற்றம் (Theorem of Perpendicular Axes).

I_x, I_y என்பவை, O_x, O_y என்ற இரண்டு செங்குத்தச்சுகளை ஒட்டி ஒரு தகட்டின் நிலைம திருப்பத்திறன்களாகவிருந்தால், O வழியாகத் தகட்டிற்குச் செங்குத்தாகச் செல்லும் அச்சை ஒட்டி அதன் நிலைம திருப்பத்திறன் $= I_x + I_y$.

(இவ்விரண்டு தேற்றங்களின் தெரிப்புகள் இங்கு வேண்டியதில்லை).

எடுத்துக்காட்டாக,

நீள் வட்டத் தகட்டின் மையத்தின் வழியாகச் செங்குத்தாகச் செல்லும் அச்சை ஒட்டி கண்டுபிடிக்கும் நிலைம திருப்பத்திறன் = அதன் நெட்டச்சு, குட்டச்சுகளை ஒட்டி கண்டுபிடிக்கும் நிலைம திருப்பத்திறன்களின் கூடுதல் $= \frac{Ma^2}{4} + \frac{Mb^2}{4}$.

பயிற்சி 46

1. $2a$, $2b$ பக்கங்கள் உள்ள ஒரு நீண்ட சதுரத்தின் பொருண்மை, M. கீழ்க்கண்ட அச்சுகளை ஒட்டி அதின் நி. தி. தி. காண்க. G, அந்த நீண்ட சதுரத்தின் பு. ஈ. மையமானல்

(i) $2a$ பக்கத்திற்கு ஒரு போகாக Gx அச்சு

(ii) $2b$ பக்கத்திற்கு ஒரு போகாக Gy அச்சு

(iii) நீண்ட சதுரத்தின் பு. ஈ. மையத்தின் வழியாக அதற்குச் செங்குத்தாக வுள்ள அச்சு Gz.

2. $\frac{x^2}{a^2}+\frac{y^2}{b^2}=1$ என்ற நீள் வட்டப் பரப்பு, குட்டச்சை ஒட்டி, அதைச் சுற்றி வரும் போது ஏற்படும் பருமத்தின் நி. தி. தி. காண்க.

3. $y^2=4ax$ என்ற பரப்பு $x=0$, முதல் $x=h$ வரை. இப்பரப்பு x அச்சைச் சுற்றி வரும் போது ஏற்படும் பருமம். இதற்கு x அச்சை ஒட்டி நி. தி. தி. காண்க.

4. ஒரு புரைக்கோளம் (hollow sphere). அரைவிட்டம் 'a'. பொருண்மை M. அதன் ஏதாமொரு விட்டத்தை யொட்டிய நி. தி. தி. காண்க.

5. ஒரு வட்ட வடிவக்கம்பி. அரைவிட்டம் a; பொருண்மை M. அதன் அம்மட்டத்திலேயே


(i) ஏதாமொரு விட்டத்தை ஒட்டி

(ii) ஏதாமொரு தொடுவரையை ஒட்டி

(iii) மையம் வழியாகச் செல்லும் செங்குத்துக் கோட்டை ஒட்டி நி. தி. தி. காண்க.

மாதிரி.

ஒரு மெல்லிய கம்பியின் செறிவு ஒரு முனையிலிருந்து உள்ள தூரத்திற்குத் தகவு பொருத்த முடையது. அந்த முனையில் கம்பிக்குச் செங்குத்தாக உள்ள ஒரு அச்சை யொட்டி அதன் நி. தி. தி. காண்க.



படம் 22

நுண் பகுதி நீளம் = PQ = $\triangle x$.

$$AP = x.$$

நுண் பகுதியின் பொருண்மை = $Rx \cdot \triangle x$.

AY அச்சை ஒட்டி நி. தி. தி. = $Kx^3 \triangle x$.

$$\text{முழு நி. தி. தி.} = K \int_0^{2a} x^3\, dx$$

$$= 4K \cdot a^4.$$

$$\text{பொருண்மை} = K \int_0^{2a} x\, dx$$

$$= 2K\, a^2.$$

$$\text{நி. தி. தி.} = 2K\, a^2 \cdot 2a^2 = M \cdot 2a^2.$$

6. வகைக் கெழுச் சமன்பாடுகள்
(Differential Equations)

6·1. மாறு ராசிகளையும், அவைகளின் நுண் கெழுக்களையும் இணைக்கும் சமன்பாடுகளே வகைக் கெழுச் சமன்பாடுகள் எனப்படும்.

ஒரு சமன்பாட்டில் தோன்றும் வகை நுண் கெழுவின் மிக உயர்ந்த வரிசையே அச்சமன்பாட்டின் வரிசை (order) எனப்படும். மிக உயர்ந்த வரிசையின் படியே (degree) அச்சமன்பாட்டின் படியெனப்படும். எடுத்துக்காட்டாக, $\left(\frac{d^2y}{dx}\right)^3 + 3\left(\frac{dy}{dx}\right) + y = 0.$ இங்கு வரிசை இரண்டு, படி மூன்று என்பதாகும்.

முதல் வரிசை முதற்படி சமன்பாடுகள் (Equations of the first order and first degree).

எல்லா விதச் சார்புகளுக்கும் தொகை காண முடியாது என்றறிந்தோம். அவ்வாறே எல்லாவித வகைக் கெழுச் சமன்பாடுகளுக்கும் தீர்வு காண முடியாது. குறிப்பிட்ட அமைப்புகளைப் பெற்ற சமன்பாடுகளுக்குத்தான் தீர்வு காணலாம்.

சமன்பாடுகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

வகை (1) x, y என்ற மாறு ராசிகள் பிரிக்கக்கூடிய வகையில் அமைந்திருப்பவை (Variables Separable).

(2) சமபடித்தான சமன்பாடுகள் (Homogeneous Equations).

(3) சமபடித்தான சமன்பாடுகளாக வில்லாமல், அவைகளைச் சமபடித்தான சமன்பாடுகளுக்கு மாற்றி அமைக் கக்கூடிய வகையில் அமைந்திருப்பவை (Non homogeneous Equations, reducible to homogeneous form).

வகை (4) சில ஈடுகள் செய்வதால் நேரடியாக மாறு ராசிகளைப் பிரிக்கக்கூடிய தன்மையைப் பெறும் சமன் பாடுகள். (Reducible to Variable Separable by proper substitution).

6·2. வகை (1). மாதிரி 1.

தீர்வு காண்க : $e^x \tan y\, dx + (1 - e^x) \sec^2 y\, dy = 0.$

சமன்பாட்டின் இருபக்கங்களையும் $\tan y\,(1 - e^x)$ ஆல் வகுக்கவும்.

$$\frac{e^x\, dx}{1 - e^x} + \frac{\sec^2 y\, dy}{\tan y} = 0.$$

$$\therefore \int \frac{e^x\, dx}{1 - e^x} + \int \frac{\sec^2 y\, dy}{\tan y} = \text{மாறிலி}$$

$$-\log(1 - e^x) + \log \tan y = \log C.$$

$$\frac{\tan y}{1 - e^x} = C$$

$$\tan y = C\,(1 - e^x).$$

மாதிரி 2.

ஒரு வளைவரையில் ஏதாமொரு புள்ளியில் செங் கோட்டடி, x ஆயத்தின் இருபடிக்குச் சமம். வளைவரை (2, 1) என்ற புள்ளிவழியாகச் செல்வதாக விருந்தால், அதன் சமன்பாட்டைக் காண்க.

$$\text{செங்கோட்டடி} = \frac{y}{\dfrac{dy}{dx}}.$$

$$\therefore \quad \frac{y}{\frac{dy}{dx}} = x^2$$

$$\therefore \quad \frac{dy}{dx} = \frac{y}{x^2}$$

$$\frac{dy}{y} = \frac{dx}{x^2}$$

$$\int \frac{dy}{y} = \int \frac{dx}{x^2}$$

$$\log y = -\frac{1}{x} + C.$$

வளைவரை (2, 1) ல் செல்வதால்,

$$\log 1 = -\frac{1}{2} + C$$

$$0 = -\frac{1}{2} + C, \quad \therefore \quad C = \frac{1}{2}.$$

∴ வளைவரையின் சமன்பாடு யாதெனில்

$$\log y = -\frac{1}{x} + \frac{1}{2}$$

$$\log y + \frac{1}{x} = \frac{1}{2}.$$

வகை (4).

மாதிரி 3.

தீர்வு காண்க: $\frac{dy}{dx} = (4x+y+1)^2$.

$$z = 4x + y + 1 \quad \text{என்க.}$$

$$\frac{dz}{dx} = 4 + \frac{dy}{dx}$$

$$\frac{dy}{dx} = \frac{dz}{dx} - 4$$

$$\therefore \frac{dz}{dx} - 4 = z^2$$

$$\frac{dz}{dx} = z^2 + 4$$

$$\frac{dz}{z^2+4} = dx$$

$$\int \frac{dz}{z^2+4} = \int dx$$

$$\frac{1}{2} \tan^{-1} \frac{z}{2} = x + C$$

$$\frac{1}{2} \tan^{-1} \frac{4x+y+1}{2} = x + C.$$

பயிற்சி 47

பின் வரும் வகைக் கெழுச் சமன்பாடுகளுக்குத் தீர்வு காண்க.

1. $x\sqrt{1+y^2} + y\sqrt{1+x^2}\,\frac{dy}{dx} = 0$

2. $\sqrt{1+x^2}\,dx + \sqrt{1+y^2}\,dy = 0$

3. $\sqrt{1-x^2}\,\sin^{-1} x\,dy + y\,dx = 0$

4. $(e^x+1)\,y\,dy + (y+1)\,dx = 0$

5. $\tan y \operatorname{sce}^2 x\,dx + \tan x \sec^2 y\,dy = 0$

6. $\frac{dy}{dx} = e^{2x-y} + x^3 e^{-y}$

7. $y - x\frac{dy}{dx} = b\left(1 + x^2 . \frac{dy}{dx}\right)$

8. $x^2(y+1)\,dx + y^2(x-1)\,dy = 0.$

9. $\cos y\, dx + (1+e^{-x}) \sin y\, dy = 0$

கட்டுப்பாடு $x = 0, \quad y = \frac{\pi}{4}$.

10. $(x-y)^2 \cdot \frac{dy}{dx} = a^2$.

11. $\frac{dy}{dx} - x \tan (y-x) = 1$.

12. $\frac{dy}{dx} = \cos (x+y)$.

13. $(2x^2+3y^2-7)\, x\, dx - (3x^2+2y^2-8)\, y\, dy = 0$
($x^2 = u$; $y^2 = v$ ஈடு செய்க).

14. $y\,(xy+1) + x\,(xy-1) \frac{dy}{dx} = 0$.

15. (3, 4) வழியாகச் செல்லும் ஒரு வளைவரையின் வரைகோட்டடி x ஆயத்தொலைக்குச் சமம். அவ்வளைவரையின் சமன்பாடு யாது ?

16. ஒரு ஆகாய விமானத்தின் விசைமாறு வீதம் $g \cos \alpha - kv$; g, k, α மாறிலிகள். $t=0$ ஆனால், $v=0$ என்ற கட்டுப்பாட்டை யொட்டி v என்னவெனக் காண்க.

17. ஒரு பொருளின் தேய்வு விகிதம் Kx. x அப்பொழுதுள்ள பொருளின் பொருண்மை. சரிபாதி பொருண்மை தேய $\frac{1}{k} \log_e 2$ வினாடிகள் ஆகும் என நிறுவுக.

18. நியூட்டன் குளிர்ச்சி விதிப்படி $\frac{dT}{dt} = -K(T - T_0)$.

இங்கு T கோளத்தின் மேல் வெப்பநிலை ; t கால அளவு. T_0 சூழ்நிலையின் வெப்பநிலை. K ஒரு மாறிலி ; $t=0$ ஆனால் $T=T_1$ என்பது கட்டுப்பாடு. இங்கு $T - T_0 = (T_1 - T_0)\, e^{-kt}$ என நிறுவுக.

6.3 வகை 2. $\frac{dy}{dx} = \frac{f(x, y)}{F(x, y)}$ என்ற அமைப்பு.

இங்கு $f(x, y)$. $F(x, y)$ என்ற இரண்டு சார்புகளும், x, y என்ற ராசிகளில் ஒத்த சமபடித்தான கோவைகள். இது ஒரு சம படித்தான சமன்பாடு ஆகும் (homogeneous equation).

எடுத்துக்காட்டாக $\frac{dy}{dx} = \frac{x^2 - y^2}{x^2 + y^2}$ சமபடித்தான சமன்பாடாகும்.

இவ்வகைச் சமன்பாடுகளின் தீர்வுகாண $y = vx$ என ஈடு செய்வோம். v என்பது x ன் சார்பாகும். ஈடாக்கினால்

$$\frac{f(x, y)}{F(x, y)} = \phi(v) \text{ ஆகும்.}$$

$$\frac{dy}{dx} = \frac{f(x, y)}{F(x, y)}$$

$$v + x\frac{dv}{dx} = \phi(v)$$

$$x\frac{dv}{dx} = \phi(v) - v$$

$$\frac{dv}{\phi(v) - v} = \frac{dx}{x}$$

$$\int \frac{dv}{\phi(v) - v} = \int \frac{dx}{x} + c.$$

தீர்வு காணலாம். பின்னர் $v = \frac{y}{x}$ ஐ ஈடாக்குவோம். x, y என்ற ராசிகளின் கோவையாகத் தீர்வு கிடைக்கும்.

மாதிரி.

தீர்வு காண்க : $\frac{dy}{dx} = \frac{y^3 + 3x^2 y}{x^3 + 3xy^2}$

$y = vx$ என்பதை ஈடாக்குக.

$$v + x\frac{dv}{dx} = \frac{v^3x^3 + 3vx^3}{x^3 + 3v^2x^3}$$

$$v + x\frac{dv}{dx} = \frac{v^3+3v}{1+3v^2}$$

$$x\frac{dv}{dx} = \frac{v^3+3v}{1+3v^2} - v$$

$$= \frac{2v-2v^3}{1+3v^2}$$

$$\therefore \quad \int \frac{(1+3v^2)\,dv}{2v-2v^3} = \int \frac{dx}{x} + c.$$

தொகைக்குரிய சார்பைப் பகுதி பின்னங்களாகப் போட வேண்டும்.

$$\frac{1}{2}\int \frac{1+3v^2}{v\,(1-v)\,(1+v)}\,dv = \int \frac{dx}{x} + c.$$

$$1+3v^2 = A\,(1-v)\,(1+v)+Bv\,(1+v)+Cv\,(1-v)$$

$$A = 1$$

$$B = 2$$

$$C = -2$$

$$\therefore \quad \frac{1}{2}\left[\int \left(\frac{1}{v} + \frac{2}{1-v} - \frac{2}{1+v}\right) dv\right] = \int \frac{dx}{x} + c.$$

$$\frac{1}{2}\left[\log v - 2\log(1-v) - 2\log(1+v)\right] = \log x + c.$$

$$\frac{1}{2}\left[\log \frac{v}{(1-v)^2\,(1+v)^2}\right] = \log x + c.$$

$$\log\left[\frac{v}{(1-v)^2\,(1+v)^2}\right]^{1/2} = \log x + c.$$

$$\log \frac{\sqrt{v}}{(1-v)\,(1+v)} = \log x + e$$

$$\log \frac{\sqrt{yx}}{\left(1-\frac{y}{x}\right)\left(1+\frac{y}{x}\right)} - \log x = c$$

$$\log \frac{\sqrt{xy}}{x^2-y^2} = \log k$$

$$\frac{\sqrt{xy}}{x^2-y^2} = k \text{ ஆகும்.}$$

பயிற்சி 48

தீர்வு காண்க :

1. $(x^2+y^2)\dfrac{dy}{dx} = xy$

2. $(x+y)^2\, dx = 2x^2\, dy$

3. $(y^2-2xy)\, dx = (x^2-2xy)\, dy$

4. $(x^2-y^2)\dfrac{dy}{dx} = 2xy,\ x=1$ ஆகவிருக்கையில் $y=1$ என்ற கட்டுப்பாட்டுக்குட்பட்டது.

5. $x(y-x)\, dy = (y+x)\, y\, dx$

6. $\dfrac{dy}{dx} = -\dfrac{x^2+3y^2}{3x^2+y^2}.$

7. $y^2+x^2\dfrac{dy}{dx} = xy\dfrac{dy}{dx}.$

8. $\dfrac{dy}{dx} = \dfrac{y+\sqrt{x^2+y^2}}{x}.$

9. $(6x^2+2y^2)\, dx - (x^2+4xy)\, dy = 0.$

10. $(xy-2y^2)\, dx - (x^2-3xy)\, dy = 0.$

11. $\dfrac{dy}{dx} = \dfrac{y}{x} + \tan\dfrac{y}{x}.$

12. $\dfrac{dy}{dx} = \dfrac{y\sin\dfrac{y}{x} - y}{x\sin\dfrac{y}{x}}.$

13. $\dfrac{dy}{dx} = \dfrac{y\left[x\cos\dfrac{y}{x} + y\sin\dfrac{y}{x}\right]}{x\left[y\sin\dfrac{y}{x} - x\cos\dfrac{y}{x}\right]}.$

14. $x\,dy - y\, dx = \sqrt{x^2+y^2}\, dx.$

15. $xdx+ydy = 2(xdy-ydx)$.

6·4 வகை 3:

$$\frac{dy}{dx}=\frac{ax+by+c}{Ax+By+C}$$ என்ற அமைப்பைப் பெறும்.

$x=X+h,\ y=Y+K$ என்று ஈடாக்குக. $\frac{dy}{dx}=\frac{dY}{dX}$.

$$\therefore\quad \frac{dY}{dX}=\frac{aX+bY+ah+bK+c}{AX+BY+Ah+BK+C}$$

h, K ஐ $ah+bK+c=0 \quad Ah+BK+C=0$ என்ற கட்டுப்பாட்டுக்குட்பட்டு கணிக்கவும்.

$$\therefore\quad \frac{dY}{dX}=\frac{aX+bY}{AX+BY}$$

இது சமபடித்தான சமன்பாடாகும்.

$Y=vX$ என்பதை ஈடு செய்து முற் கூறிய முறையில் தீர்வு காணமுடியும்.

குறிப்பு: h, k ஐ கணிக்கும் பொழுது $\frac{a}{A}=\frac{b}{B}$ ஆகவிருந்தால்,

$$ah+bK+c=0$$

$$Ah+BK+C=0$$

என்ற இரு சமன்பாடுகளும் ஒன்றுக் கொன்று முரண்பாடாகவிருக்கும். h, k ஐக் காண இயலாது. இந்த நிலையில், $ax+by=v$ என்று ஈடாக்கினல் ராசிகளை நேரடியாகப் பிரிக்கும் வகைக்குட்படும். தீர்வு காணலாம்.

மாதிரி 1.

தீர்வு காண்க: $\frac{dy}{dx}=\frac{x+2y-3}{2x+y-3}$.

இங்கு $\frac{a}{A} \neq \frac{b}{B}$ என்பதைக் கவனிக்கவும்.

$x = X + h;\ \ y = Y + k,$ ஈடு செய்தால்

$$\frac{dY}{dX} = \frac{X+2Y+h+2k-3}{2X+Y+2h+k-3}$$

$$h + 2k - 3 = 0$$

$$2h + k - 3 = 0$$

இவ்விரண்டு சமன்பாடுகளைத் தீர்க்க $h=k=1$ என்பதைக் காண்போம். ஆகவே

$$x = X + 1;\ \ y = Y + 1 \ \ldots\ldots (1).$$

$$\frac{dY}{dX} = \frac{X+2Y}{2X+Y}$$

$Y = vX$ ஐ ஈடாக்கினல்

$$v + X\frac{dv}{dX} = \frac{X+2vX}{2X+vX} = \frac{1+2v}{2+v}$$

$$X\frac{dv}{dX} = \frac{1+2v}{2+v} - v$$

$$= \frac{1-v^2}{2+v}.$$

$$\int \frac{(2+v)\,dv}{1-v^2} = \int \frac{dX}{X} + \text{மாறிலி}.$$

இடப்பக்கம் தொகைக் குரியவற்றைப் பகுதி பின்னங்களாக்கி, தொகை காணவேண்டும்.

$$\frac{2+v}{1-v^2} = \frac{A}{1+v} + \frac{B}{1-v}$$

$$A = \frac{1}{2}\ ;\quad B = \frac{3}{2}$$

$$\int \frac{1}{2}\,\frac{dv}{1+v} + \int \frac{3}{2}\cdot\frac{dv}{1-v} = \int \frac{dX}{X} + \text{மாறிலி}$$

$$\log (1+v)^{1/2} - \log (1-v)^{3/2} = \log X + \log c$$

$$\log \frac{(1+v)^{1/2}}{(1-v)^{3/2}} = \log cX$$

$$\frac{(1+v)^{1/2}}{(1-v)^{3/2}} = cX$$

$$\frac{1+v}{(1-v)^3} = c^2X^2$$

$$\frac{1+\frac{Y}{X}}{\left(1-\frac{Y}{X}\right)^3} = c^2 X^2$$

$$\frac{(X+Y)}{(X-Y)^3} \cdot X^2 = c^2 X^2$$

$$\frac{X+Y}{(X-Y)^3} = c^2 = k \text{ என்க.}$$

$$X+Y = x+y-2$$

$$X-Y = (x-y)$$

$$\therefore \quad \frac{x+y-2}{(x-y)^3} = k.$$

$$\therefore \quad x+y-2 = k\,(x-y)^3.$$

மாதிரி 2.

தீர்வு காண்க : $\dfrac{dy}{dx} = \dfrac{x-2y+3}{2x-4y+5}$.

இங்கு $\dfrac{a}{A} = \dfrac{b}{B}$ எனக் கவனிக்கவும்.

$x - 2y = v$ என்க.

x ஐப் பொருத்த வகைக் கெழு கண்டால்

$$1 - 2\frac{dy}{dx} = \frac{dv}{dx}$$

$$\therefore \quad 1 - 2\left[\frac{x-2y+3}{2x-4y+5}\right] = \frac{dv}{dx}$$

(அ. து) $1 - 2\left[\frac{v+3}{2v+5}\right] = \frac{dv}{dx}$

$$\frac{(2v+5) - 2(v+3)}{2v+5} = \frac{dv}{dx}$$

$$-\frac{1}{2v+5} = \frac{dv}{dx}$$

$$\int (2v+5)\, dv = -\int dx + C$$

$$v^2 + 5v = -x + C$$

$$(x-2y)^2 + 5(x-2y) = -x + C$$

$$x^2 + 4y^2 - 4xy + 5x - 10y + x = C$$

$$x^2 + 4y^2 - 4xy + 6x - 10y = C.$$

மாதிரி 3.

தீர்வுகாண்க : $\frac{dy}{dx} = \frac{2x - y + 1}{x - 2y + 1}$

இங்கு $a + B = 0$ என்பதைக் காணவும். இந்த மாதிரியான சமன்பாடுகளை, அவைகளின் உறுப்புகளைச் சீராக அமைப்பதால், தீர்வு காண முடிகிறது.

$$(x - 2y + 1)\, dy = (2x - y + 1)\, dx$$

$$x\, dy + y\, dx - 2y\, dy + dy = 2x\, dx + dx$$

$$d(xy) - 2y\, dy + dy = 2x\, dx + dx$$

$$\int d(xy) - 2\int y\, dy + \int dy = \int 2x\, dx + \int dx + C$$

$$xy - y^2 + y = x^2 + x + C.$$

பயிற்சி 49

தீர்வுகாண்க.

1. $\frac{dy}{dx} = \frac{x - 3y + 2}{3x - 5y}$

2. $(12x - 5y + 9)\, dx + (5x + 2y - 4)\, dy = 0$

3. $\dfrac{dy}{dx} = \dfrac{x + 2y - 3}{2x + y - 3}$

4. $\dfrac{dy}{dx} = \dfrac{x + 7y + 2}{3x + 5y + 6}$

5. $(3y - 7x + 7)\,dx + (7y - 3x + 3)\,dy = 0$

6. $(x + y + 1)\,dx + (3x + 4y + 4)\,dy = 0$

7. $\dfrac{dy}{dx} = \dfrac{2x + y + 6}{y - x - 3}$

8. $(2x + 18y - 14)\dfrac{dy}{dx} = 6x + 5y - 7$

9. $(2x - 4y + 3)\dfrac{dy}{dx} + (x - 2y + 1) = 0$

10. $\dfrac{dy}{dx} = \dfrac{2y + x + 1}{4y + 2x + 3}$.

6·5 நேரிய சமன்பாடுகள் (Linear Equations).

$\dfrac{dy}{dx} + Py = Q$ என்பது இச்சமன்பாட்டின் அமைப்பு. இங்கு P, Q, x ன் சார்புகள் மாத்திரம் எனக் குறிப்பிடத் தக்கது.

இப்பொழுது, $\dfrac{d}{dx}\left[e^{\int P dx} \cdot y\right]$

$$= e^{\int P dx} \cdot \frac{dy}{dx} + y \cdot e^{\int P dx} \cdot P$$

$$= e^{\int P dx}\left[\frac{dy}{dx} + Py\right]$$

ஆகவே,

$$e^{\int P dx}\left[\frac{dy}{dx} + Py\right] = \frac{d}{dx}\left[e^{\int P dx} \cdot y\right]$$

என்ற பொருத்தமான (exact) வகைக் கெழு பகுதி கிடைக்கிறது.

ஆகவே, $\left[\dfrac{dy}{dx} + Py\right]$ ஐ $e^{\int P dx}$ ஆல் பெருக்கினால்,

பொருத்தமான வகைக் கெழு கிடைப்பதினால், $e^{\int P dx}$ க்குத் தொகைப் பெருக்குச் சினை (Integrating factor) எனச் சொல்வோம். ஆகவே $\frac{dy}{dx} + Py = Q$.

இருபக்கங்களையும் $e^{\int P dx}$ ஆல் பெருக்க

$$e^{\int P dx}\left[\frac{dy}{dx} + Py\right] = Qe^{\int P dx}$$

அதாவது $\frac{d}{dx}\left[Ye^{\int P dx}\right] = Qe^{\int P dx}$.

இருபக்கங்களிலும் x ஐ ஒட்டித் தொகை கண்டால்

$$Ye^{\int P dx} = \int Qe^{\int P dx}\, dx + C.$$

இதுதான் தீர்வாகும்.

மாதிரி 1.

தீர்வு காண்க : $\cos^2 x \,.\, \frac{dy}{dx} + y = \tan x$

$$\frac{dy}{dx} + \frac{y}{\cos^2 x} = \frac{\tan x}{\cos^2 x}$$

$$\frac{dy}{dx} + Y \sec^2 x = \tan x \sec^2 x.$$

இங்கு $P = \sec^2 x$; $Q = \tan x \sec^2 x$

$$\int P dx = \int \sec^2 x\, dx = \tan x$$

$$e^{\int P dx} = e^{\tan x}$$

$e^{\tan x}$ தான் தொகை பெருக்குச் சினை.

தீர்வு என்னவென்றால்

$$\begin{aligned} Ye^{\tan x} &= \int e^{\tan x} \,.\, \tan x \sec^2 x\, dx \\ &= \int e^u u\, du \quad [u = \tan x \text{ என்க}] \\ &= \int u\, d\,(e^u) \end{aligned}$$

$$= e^u u - e^u$$
$$= e^u (u - 1)$$
$$= e^{\tan x} (\tan x - 1) + C.$$

மாதிரி 2.

தீர்வுகாண்க :

$$x \cos x \cdot \frac{dy}{dx} + y (x \sin x + \cos x) = 1.$$

$$\frac{dy}{dx} + y \cdot \left(\frac{x \sin x + \cos x}{x \cos x}\right) = \frac{1}{x \cos x}$$

$$\frac{dy}{dx} + y \left(\tan x + \frac{1}{x}\right) = \frac{1}{x \cos x}.$$

இங்கு $P = \tan x + \frac{1}{x}$; $Q = \frac{1}{x \cos x}$

$$\int P dx = \int \left(\tan x + \frac{1}{x}\right) dx$$
$$= \log \sec x + \log x$$
$$= \log (x \sec x)$$
$$e^{\int P dx} = e^{\log (x \sec x)} = x \sec x$$

தீர்வு யாதெனில்

$$y \cdot x \sec x = \int \frac{x \sec x}{x \cos x} dx$$
$$= \int \sec^2 x \, dx = \tan x + C$$
$$\therefore \quad yx \sec x = \tan x + C.$$

பயிற்சி 50

1. $\frac{dy}{dx} + y \tan x = \cos^3 x.$

2. $\frac{dy}{dx} - \frac{xy}{1 - x^2} = \frac{1}{1 - x^2}.$

3. $(1 + x^2) \frac{dy}{dx} + y = e^{tan^{-1} x}.$

4. $\frac{dy}{dx} + \frac{3x^2 y}{1 + x^3} = \frac{1 + x^2}{1 + x^3}.$

5. $\frac{dy}{dx} - y\tan x = e^{x}\sec x.$ 6. $(x^2+1)\frac{dy}{dx} + 2xy = 4x^2.$

7. $x(x-1)\frac{dy}{dx} - (x-2)y = x^2(2x-1).$

8. $\frac{dy}{dx} + y\cos x = (1+\sin^2 x)\sin 2x.$

9. $\frac{dy}{dx} + 2xy = e^{-x^2} . x.$

10. $\frac{dy}{dx} + \frac{y}{x\log x} = \frac{\sin 2x}{\log x}.$

11. $(x+1)\frac{dy}{dx} - xy = e^{x}(x+1)^{n+1}.$

12. $\frac{dy}{dx} + (y-1)\cos x = e^{-\sin x \cot^2 x}.$

13. $(1+y^2)\,dx = (\tan^{-1} y - x)\,dy.$

14. $1 + (x\tan y - \sec y)\frac{dy}{dx} = 0.$

15. $x\log x\frac{dy}{dx} + y = 2\log x.$

6·6 பர்னௌலியின் அமைப்பு :

$\frac{dy}{dx} + Py = Qy^n$. இங்கு P, Q x ஐ மாத்திரம் ஒட்டிய சார்புகள் ஆகும். இருபக்கங்களையும் y^n ஆல் வகுத்து வலப் பக்கத்தில் x ஐ மாத்திரம் ஒட்டிய சார்பு இருக்குமாறு மாற்ற வேண்டும்.

$$\frac{dy}{dx} + Py = Q \cdot y^n.$$

இருபக்கங்களையும் y^n ஆல் வகுத்தால்

$$\frac{1}{y^n}\cdot\frac{dy}{dx} + \frac{P}{y^{n-1}} = Q$$

$$\frac{1}{y^{n-1}} = v \text{ என்க.}$$

$$-\frac{(n-1)}{y^n} \cdot \frac{dy}{dx} = \frac{dv}{dx}$$

$$\therefore \; \frac{1}{y^n} \cdot \frac{dy}{dx} = -\frac{1}{n-1} \cdot \frac{dv}{dx}$$

$$-\frac{1}{n-1} \cdot \frac{dv}{dx} + Pv = Q$$

$$\frac{dv}{dx} - P(n-1)\, v = -Q(n-1)$$

இது, v, x ல் திட்ட அமைப்பைப் பெற்று நேரிய சமன் பாடு தீர்க்கும் முறையில் தீர்வைக் காணலாம்.

மாதிரி 1.

தீர்வுகாண்க: $\frac{dy}{dx} + \frac{y}{x} \log y = \frac{y}{x^2} (\log y)^2$

இரு பக்கங்களையும் $y (\log y)^2$ ஆல் வகுக்க,

$$\frac{1}{y(\log y)^2} \cdot \frac{dy}{dx} + \frac{1}{x} \cdot \frac{1}{\log y} = \frac{1}{x^2}$$

$$\frac{1}{\log y} = v \text{ என்க.}$$

$$-\frac{1}{(\log y)^2} \cdot \frac{1}{y} \cdot \frac{dy}{dx} = \frac{dv}{dx}$$

$$-\frac{dv}{dx} + \frac{v}{x} = \frac{1}{x^2}$$

$$\frac{dv}{dx} + \frac{v}{x} = -\frac{1}{x^2}.$$

இங்கு $P = -\frac{1}{x}$.

$$\int P\,dx = \int -\frac{dx}{x} = -\log x$$

$$e^{\int P\,dx} = e^{-\log x} = \frac{1}{x}$$

தீர்வு யாதெனில்

$$ve^{\int P\,dx} = \int -\frac{1}{x^2}\cdot\frac{1}{x}\,dx$$

$$\frac{v}{x} = -\frac{x^{-2}}{-2} + c$$

$$\frac{1}{x\log y} = \frac{1}{2x^2} + c.$$

பயிற்சி 51

தீர்வு காண்க :

1. $\frac{dy}{dx} + \frac{y}{x} = \frac{y^2}{x^2}.$
2. $\frac{dy}{dx} - \frac{2x}{x^2+1}\cdot y = \frac{y^2}{x+1}.$
3. $\frac{dy}{dx} + \frac{y}{x} = x^4 \cdot y^5.$
4. $\frac{dy}{dx} + xy = y^2 \sin x.$
5. $2\cdot\frac{dy}{dx} - \frac{y}{x} = \frac{y^2}{x^2}.$
6. $\frac{dy}{dx} = y^n \cdot \sin 2x - y\cos x.$
7. $x\frac{dy}{dx} + y = x^3 \cdot y^2.$
8. $x\frac{dy}{dx} + y = y^2 \log x.$
9. $\frac{dy}{dx} - \frac{\tan y}{1+x} = (1+x)\,e^x \cdot \sec y.$
10. $\frac{dy}{dx} + x\sin 2y = x^3 \cos^2 y.$
11. $(x+1)\frac{dy}{dx} + 1 = 2e^{-y}.$
12. $\frac{dy}{dx} + \frac{x}{1-x^2}\,y = x\sqrt{y}.$
13. $a\frac{dy}{dx} + y = \frac{x}{y^{n-1}}.$
14. $x^2 - y^2 + 2xy\frac{dy}{dx} = 0.$
15. $\frac{dy}{dx} - y\tan x = \frac{\sin x \cdot \cos^2 x}{y^2}.$

6·7. இருவரிசை முதற்படி வகைக் கெழுச் சமன்பாடு. (Linear Differential Equation of the Second order).

இதன் உருவம் $a\dfrac{d^2y}{dx^2}+b\,.\dfrac{dy}{dx}+c=X$ (1)

என்பதாகும். இங்கு a, b, c மாறிலிகள். X x ஐப்

பொறுத்த சார்பு.

ஆனல் முதலில் $a\dfrac{d^2y}{dx^2}+b\dfrac{dy}{dx}+c=0$ (2)

என்ற சமன்பாட்டை எடுத்துக் கொள்வோம். இச்சமன்பாட்டைத் தீர்க்க, $y=e^{mx}$ என்றதீர்வை (m ன் குறிப்பிட்ட மதிப்புகளுக்கு) எடுத்துக் கொள்வோம். $\dfrac{dy}{dx}=me^{mx}$; $\dfrac{d^2y}{dx^2}=m^2e^{mx}$ ஆகிறது. இவைகளைச் சமன்பாட்டில் ஈடாக்கினல்

$$e^{mx}(am^2+bm+c)=0 \text{ ஆகும்.}$$

m ன் மதிப்புகளை $am^2+bm+c=0$ என்ற சமன்பாட்டால் காணலாம். இந்த m ஐப் பொருத்த சமன்பாட்டிற்கு உதவிச் சமன்பாடு (auxiliary equation) என்று பெயர்.

m ன் மதிப்புகள் மூன்று வகைப்படும்.

(i) உதவிச் சமன்பாட்டிற்கு இரண்டு மெய்யானதும் வெவ்வேறுனதுமான மதிப்புகள் இருக்கட்டும். அவைகளை m_1, m_2 எனக் கொள்வோம். $\therefore$ $y=e^{m_1x}$, $y=e^{m_2x}$ இவை இரண்டும், சமன்பாடு (2) ன் தீர்வுகள்.

ஆகவே Ae^{m_1x}, Be^{m_2x} இரண்டும் (2) ன் தீர்வுகள்.

ஆகவே, $y=Ae^{m_1x}+Be^{m_2x}$ (2) வது சமன்பாட்டின் மிகப் பொதுத் தீர்வு ஆகும். ஏனென்ருல், சமன்பாட்டின் வரிசைக்குகந்த முறையில், இரண்டு மாறிலிகள் அமைந்துள்ளன.

(ii) உதவிச் சமன்பாட்டின் மூலங்கள் மெய்யாகவிருந்து, சமமானல், அதாவது $m_2=m_1$ ஆனல்,

$y=(Ax+B)\,e^{m_1x}$ என்பது மிகப் பொதுத் தீர்வு ஆகும்.

(iii) உதவிச் சமன்பாட்டின் மூலங்கள் இரண்டும் கற்பனையாக விருந்தால், அதாவது $m_1 = \alpha + i\beta$, $m_2 = \alpha - i\beta$ (∴ கற்பனை மூலங்கள் ஜோடியாகத்தான் வரும்), அப்பொழுது

$$y = e^{\alpha x} \left[\mathrm{C} \cos \beta x + \mathrm{D} \sin \beta x \right]$$

அல்லது $y = e^{\alpha x} \cdot \mathrm{A} \cos (\beta x + \gamma)$.

மாதிரி 1.

தீர்வு காண்க : $\frac{d^2y}{dx^2} - 6\frac{dy}{dx} + 8y = 0.$

உதவிச் சமன்பாடு யாதெனில்

$$m^2 - 6m + 8 = 0$$

$$(m - 4)(m - 2) = 0$$

$$m = 4, 2.$$

$$\therefore \quad y = \mathrm{A}e^{4x} + \mathrm{B}e^{2x}.$$

மாதிரி 2.

தீர்வு காண்க : $\frac{d^2y}{dx^2} + 2\frac{dy}{dx} + y = 0.$

உதவிச் சமன்பாடு யாதெனில்

$$(m^2 + 2m + 1) = 0$$

$$(m + 1)^2 = 0$$

$$m = -1, -1.$$

$$\therefore \quad y = e^{-x}(\mathrm{A}x + \mathrm{B}).$$

மாதிரி 3.

தீர்வு காண்க : $\frac{d^2y}{dx^2} + 16y = 0.$

உதவிச் சமன்பாடு, $m^2 + 16 = 0$

$$m^2 = -16$$

$$m = \pm 4i.$$

$$\therefore \quad y = \mathrm{A} \cos 4x + \mathrm{B} \sin 4x.$$

பயிற்சி 52

தீர்வு காண்க:

1. $\frac{d^2y}{dx^2} + 3\frac{dy}{dx} + 2y = 0.$ 2. $\frac{d^2y}{dx^2} - 6\frac{dy}{dx} + 9y = 0.$

3. $\frac{d^2y}{dx^2} + 4\frac{dy}{dx} + 6y = 0.$ 4. $\frac{d^2y}{dx^2} + 4y = 0.$

5. $\frac{d^2y}{dx^2} + 5\frac{dy}{dx} + 3y = 0.$

செயலிகள் (operators):

$\frac{dy}{dx} = \mathrm{D}y$ என்று குறிப்போம். Dy என்பதன் விளக்கம், D என்னும் வகைக் கெழுச் செயலி, y எனும் சார்பின்மேல் இயங்குகிறது. அவ்வாறே $\mathrm{D}^2y = \frac{d^2y}{dx^2}$ எனவும், $\mathrm{D}^ry = \frac{d^ry}{dx^r}$ எனவும் குறிப்பிடலாம்.

6·8. சிறப்புத்தீர்வு காணும் முறை (Method for finding Particular Integral),

$f(\mathrm{D})\,y = \mathrm{X}$ ஆகவிருக்கையில், $\mathrm{X} = e^{ax}$, $\sin ax$, $\cos ax$, x^m ஆக இருக்கலாம்.

(1) $f(\mathrm{D})\,y = e^{ax}$ என்பதின் முழுத்தீர்வு காணல். $f(\mathrm{D})\,y = 0$ என்ற சமன்பாட்டின் தீர்வை முற்கூறிய முறையில் காணலாம். அது $f(\mathrm{D})\,y = e^{ax}$ ன் துணைத்தீர்வாகும் (complementary function). இப்பொழுது $f(\mathrm{D})\,y = e^{ax}$ ன் சிறப்புத்தீர்வு காணல் வேண்டும்.

முழுத்தீர்வு = துணைத்தீர்வு + சிறப்புத்தீர்வு

$$y = \text{C.F.} + \text{P.I.} \text{ ஆகும்.}$$

$$\mathrm{D}e^{ax} = ae^{ax}$$

$$\mathrm{D}^2e^{ax} = a^2e^{ax}$$

....

$$\mathrm{D}^ne^{ax} = a^n e^{ax}.$$

எனவே $f(D)\, e^{ax} = f(a)\, e^{ax}$.

$$\therefore \quad e^{ax} = \frac{1}{f(D)} f(a)\, e^{ax}.$$

$$\therefore \quad \frac{1}{f(D)}\, e^{ax} = \frac{1}{f(a)} \cdot e^{ax}.$$

ஆகவே $f(D)\, y = e^{ax}$ என்ற சமன்பாட்டிற்கு

$$y = \frac{1}{f(D)}\, e^{ax}.$$

$$= \frac{1}{f(a)}\, e^{ax}$$ என்ற தீர்வு கிடைக்கும்.

இதுவே சிறப்புத் தீர்வாகும். (1)

$$\therefore \quad \text{முழுத்தீர்வு} = \text{துணைத்தீர்வு} + \frac{1}{f(a)}\, e^{ax}.$$

கவனிப்புகள் (1). இங்கு $f(a) = 0$ ஆனல் முறை தவறுதல் ஆகும். இது $f(m) = 0$ என்ற சமன்பாட்டில், ஒரு தீர்வு a ஆக இருந்தால் இது நேரும்.

$$f(D) = (D-a)(D-m_2) \ldots\ldots (D-m_n)$$

$$y = \frac{1}{f(D)} \cdot e^{ax}.$$

$$= \frac{1}{(D-a) \cdot f_1(D)}\, e^{ax}$$

$$= \frac{1}{(D-x)\, f_1(a)}\, e^{ax}.$$

$$\therefore \quad (D-a)\, y = \frac{1}{f_1(a)}\, e^{ax}.$$

$$\frac{dy}{dx} - ay = \frac{1}{f_1(a)}\, e^{ax}.$$

தீர்வுகண்டால், $y = \dfrac{x\, e^{ax}}{f_1(a)}$ ஆகும். ...... (2)

(2) $f(D) = (D-a)^2 (D-m_3) \ldots\ldots (D-m_n)$ என்று இருக்குமானல்,

$$y = \frac{1}{(D-a)^2 (D-m_3) \ldots\ldots (D-m_n)} e^{ax}$$

$$= \frac{1}{(D-a)^2 . f_2(D)} e^{ax}$$

$$= \frac{1}{(D-a)^2 . f_2(a)} e^{ax}$$

$$(D-a)^2 \; y = \frac{1}{f_2(a)} e^{ax}$$

$$(D-a)(D-a) . y = \frac{1}{f_2(a)} e^{ax}$$

$$= \frac{x^2}{2} . \frac{e^{ax}}{f_2(a)} \qquad \ldots\ldots \quad (3)$$

மாதிரி 1.

தீர்வு காண்க : $(D^2+4D+8)\, y = (1+e^x)^2$

உதவிச் சமன்பாடு $m^2+4m+8=0$ ஆகிறது.

$$m = \frac{-4 \pm \sqrt{16-32}}{2}$$

$$= \frac{-4 \pm 4i}{2}$$

$$= -2 \pm 2i$$

துணைத் தீர்வு $= e^{-2x} [A \cos 2x + B \sin 2x]$

சிறப்புத் தீர்வு $= \frac{1}{D^2+4D+8} (1+e^{2x}+2e^x)$

சிறப்புத் தீர்வு$_1$ $= \frac{1}{D^2+4D+8} . 1 \quad (\because e^{0x}=1)$

$$= \frac{1}{8}$$

சிறப்புத் தீர்வு$_2$ $= \frac{1}{D^2+4D+8} . e^{2x} = \frac{e^{2x}}{20}$

சிறப்புத் தீர்வு$_3$ $= \frac{1}{D^2+4D+8} . 2e^x$

$$= \frac{2}{13} e^x.$$

முழுத் தீர்வு $y = C . F+P . D_1+PD_2+PD_3$

$$y = e^{-2x} (A \cos 2x+B \sin 2x) + \frac{1}{8}+\frac{e^{2x}}{20}+\frac{2e^{x}}{13}$$

மாதிரி 2.

தீர்வு காண்க : $(D^2+3D+2)\, y=e^{-x}$

உதவிச் சமன்பாடு $m^2+3m+2=0$

$$(m+2)\,(m+1) = 0$$

$$m= -2,\ -1.$$

துணைத் தீர்வு $= Ae^{-2x}+Be^{-x}.$

சிறப்புத் தீர்வு $= \dfrac{1}{D^2+3D+2}\, e^{-x}$

$$= \frac{1}{(D+2)\,(D+1)}\, e^{-x}$$

$$= \frac{xe^{-x}}{(-1+2)}$$

$$= xe^{-x}$$

முழுத் தீர்வு $y = Ae^{-2x}+Be^{-x}+xe^{-x}$

மாதிரி 3.

தீர்வு காண்க : $(D^2+6D+9)\, y=2e^{-3x}$

உதவிச் சமன்பாடு, $m^2+6m+9=0$

$$(m+3)^2=0$$

$$m= -3,\ -3$$

துணைத் தீர்வு $= e^{-3x} (Ax+B)$

சிறப்புத் தீர்வு $= \dfrac{1}{D^2+6D+9} \cdot 2e^{-3x}$

$$= \frac{1}{(D+3)^2}\, 2e^{-3x}$$

$$= \frac{x^2}{2} \cdot 2e^{-3x}$$

$$= x^2e^{-3x}$$

முழுத் தீர்வு $= e^{-3x}(Ax+B) + x^2e^{-3x}$.

பயிற்சி 53

தீர்வு காண்க.

1. $(D^2-5D+6)\,y = e^{4x}$.

2. $(D^2+4D+6)\,y = 5e^{-2x}$.

3. $(D^2-13D+12)\,y = e^{-2x}+5e^{x}$

4. $(D^2-6D+9)\,y = 2e^{-x}+e^{3x}$.

5. $(D^2+3D+2)\,y = e^{4x}$, $x=0$, $x=1$ ஆகையால், $y=0$.

6. $(D^2-2D+1)\,y = e^{x}+e^{2x}$.

7. $(D^2-3D+2)\,y = 2e^{3x}$, $x=0$, $\frac{1}{2}\log 2$ ஆகையால் $y=0$ எனக்கொள்க.

8. $(D^2-a^2)\,y = e^{nx}+e^{ax}$.

9. $(D^2-6D+8)\,y = \cosh 2x$.

10. $(D^2+5D+7)\,y = e^{-x^{1/2}}+5$.

6·9. சிறப்புத் தீர்வு (தொடர்ச்சி): வலப்பக்கம் X, $\sin ax$ அல்லது $\cos ax$ ஆகவிருந்தால் சிறப்புத் தீர்வுகாணும் முறை.

$$f(D)\,y = \cos ax \text{ அல்லது } \sin ax$$

$$D \cos ax = -a \sin ax$$

$$D^2 \cos ax = -a^2 \cos ax$$

$$D^3 \cos ax = a^3 \sin ax$$

$$D^4 \cos ax = a^4 \cos ax = (-a^2)^2 \cos ax$$

$$\cdots \quad \cdots \quad \cdots \quad \cdots \quad \cdots \quad \cdots$$

இவ்வாறு கணக்கிடுகையில்

$$D^{2n} \cos ax = (-a^2)^n \cos ax \text{ ஆகிறது.}$$

$$\therefore \quad f(D^2)\cos ax = f(-a^2)\cos ax.$$

$$\cos ax = \frac{1}{f(D^2)} \cdot f(-a^2)\cos ax$$

$$\frac{1}{f(D)^2}\cos ax = \frac{1}{f(-a^2)}\cos ax.$$

D^2 இருக்கும் இடத்து $(-a^2)$ போடவும்.

அவ்வாறே $\dfrac{1}{f(D^2)}\sin ax = \dfrac{1}{f(-a^2)}\sin ax.$

கவனிப்பு : (1) $f(-a^2) = 0$ ஆனல் இந்த முறை தவறி விடுகிறது. அதாவது (D^2+a^2), $f(D^2)$ ன் ஒரு சினை ஆகும். அப்பொழுது $\cos ax =$ மெ. ப. e^{iax} என்றும்

$\sin ax =$ க. ப. e^{iax} என்றும்

எழுதி, முன் கூறியவண்ணம் சிறப்புத் தீர்வைக் காண்போம்.

மாதிரி 1.

$$\frac{1}{D^2+a^2}\cos ax = \text{மெ. ப. } \frac{1}{D^2+a^2} \cdot e^{iax}$$

$$= \text{மெ. ப. } \frac{1}{(D+ia)(D-ia)} e^{iax}$$

$$= \text{மெ. ப. } \frac{1}{2ia} \cdot xe^{iax}$$

$$= \text{மெ. ப. } -\frac{xi}{2a}[\cos ax + i\sin ax]$$

$$= \frac{x\sin ax}{2a}$$

அவ்வாறே, $\dfrac{1}{D^2+a^2}\sin ax = -\dfrac{x\cos ax}{2a}$ என நிறுவலாம்.

மாதிரி 2.

தீர்வு காண்க. $(D^2-3D+2)\,y = \sin 3x$

உதவிச் சமன்பாடு, $m^2-3m+2=0$

$$(m-2)(m-1)=0$$

$$m = 2,\ 1.$$

துணைத் தீர்வு $Ae^{2x}+Be^{x}$

சிறப்புத் தீர்வு $= \dfrac{1}{D^2-3D+2} \cdot \sin 3x$

$$= \frac{1}{-9-3D+2} \cdot \sin 3x$$

$$= \frac{1}{-(3D+7)} \sin 3x$$

$$= \frac{3D-7}{-(3D+7)(3D-7)} \sin 3x$$

$$= \frac{(3D-7)\sin 3x}{-(9D^2-49)}$$

$$= \frac{9\cos 3x - 7\sin 3x}{130}$$

முழுத் தீர்வு $y = Ae^{2x}+Be^{x}+\dfrac{9\cos 3x-7\sin 3x}{130}$.

மாதிரி 3.

தீர்வு காண்க. $\dfrac{d^2x}{dt^2}+4x = a\sin 2t$

உதவிச் சமன்பாடு, $m^2+4=0$

$$m = \pm 2i$$

துணைத் தீர்வு $A\cos 2t + B\sin 2t$.

சிறப்புத் தீர்வு: $\dfrac{1}{D^2+4}\, a\sin 2t$

$$= \text{க. ப. } \frac{1}{D^2+4}\, a \cdot e^{i \cdot 2t}$$

$$= \text{க. ப. } \frac{1}{(D+2i)(D-2i)} \cdot a\, e^{i\,2t}$$

$$= \text{க. ப. } \frac{at \cdot e^{2i\,t}}{4i}$$

$$= \text{க. ப. } \frac{at(\cos 2t + i\sin 2t)}{4i}$$

$$= \text{க. ப.} \frac{-at \cdot i(\cos 2t + i \sin 2t)}{4}$$

$$= -\frac{at}{4} \cos 2t.$$

முழுத் தீர்வு $y = A \cos 2t + B \sin 2t - \frac{at}{4} \cos 2t.$

பயிற்சி 54

தீர்வு காண்க.

1. $(D^2 + 2D + 1)\, y = 2e^{-x} + \sin 2x$

2. $(D^2 + 5D + 6)\, y = \sin 4x + e^{-2x}$

3. $(2D^2 + D)\, y = e^{2x} + \sin x$

4. $(D^2 - 8D + 9)\, y = \cos 5x$

5. $(D^2 + 9)\, y = \cos 3x$

6. $(D^2 + 16)\, x = \sin 4t$, $t = 0$ ஆனல் $x = 0 = \frac{dx}{dt}$

7. $(D^2 + 5D - 6)\, y = \sin 4x \sin x$

8. $(D^2 - 3D + 2)\, y = \cos 3x \cos 2x$

9. $(D^2 - 2D + 1)\, y = e^{2x} - \cos 3x$

10. $(D^2 + 1)\, y = 2 \cos^2 \frac{t}{2}$

11. $(D^2 - 4)\, y = \sin^3 x - \cos^2 x$

12. $(D^2 + 3D + 2)\, y = e^{-x} + \cos x.$

சிறப்புத் தீர்வு (தொடர்ச்சி): $f(D) = X$ ல் $X = x^m$ ஆனல் தீர்வு காணும் முறை.

$$f(\mathrm{D})\, y = x^m$$

$$y = \frac{1}{f(\mathrm{D})}$$

மாதிரி 1.

தீர்வு காண்க :

$$(\mathrm{D}^2 + 4\mathrm{D} + 5)\, y = 3x^2 - 2.$$

உதவிச் சமன்பாடு, $m^2 + 4m + 5 = 0.$

$$m = \frac{-4 \pm \sqrt{16 - 20}}{2}$$

$$= \frac{-4 \pm 2i}{2}$$

$$= -2 \pm i.$$

துணைத் தீர்வு e^{-2x} $(\mathrm{A} \cos x + \mathrm{B} \sin x)$.

சிறப்புத் தீர்வு : $\frac{1}{\mathrm{D}^2 + 4\mathrm{D} + 5} \cdot 3x^2 - 2$

$$= \frac{1}{5 + 4\mathrm{D} + \mathrm{D}^2} (3x^2 - 2)$$

$$= \frac{1}{5\left(1 + \frac{4\mathrm{D} + \mathrm{D}^2}{5}\right)} (3x^2 - 2)$$

$$= \frac{1}{5}\left(1 + \frac{4\mathrm{D} + \mathrm{D}^2}{5}\right)^{-1} (3x^2 - 2)$$

$$= \frac{1}{5}\left(1 - \frac{4\mathrm{D} + \mathrm{D}^2}{5} + \frac{\overline{4\mathrm{D} + \mathrm{D}^2}^2}{5}\right) (3x^2 - 2)$$

$$= \frac{1}{5}\left(1 - \frac{4\mathrm{D}}{5} - \frac{\mathrm{D}^2}{5} + \frac{16\mathrm{D}^2}{25} + \frac{8\mathrm{D}^3}{5}\right) (3x^2 - 2)$$

$$= \frac{1}{5}\left(1 - \frac{4\mathrm{D}}{5} + \frac{11\mathrm{D}^2}{25} + \frac{8\mathrm{D}^3}{5}\right) (3x^2 - 2)$$

$$= \frac{1}{5}\left[3x^2 - 2 - \frac{4}{5}(6x) + \frac{11}{25}(6)\right]$$

$$= \frac{1}{5}\left[3x^2 - 2 - \frac{24x}{5} + \frac{66}{25}\right]$$

$$= \frac{1}{125}\,[\,75x^2 - 50 - 120x + 66\,]$$

$$= \frac{1}{125}\,[\,75x^2 - 120x + 16\,].$$

முழுத்தீர்வு = துணைத்தீர்வு + சிறப்புத்தீர்வு.

பயிற்சி 55

தீர்வு காண்க.

1. $(D^2 - 5D + 6)\,y = x^2 - x + 2$
2. $(D - 1)^2\,y = x$
3. $(D^2 + 3D + 2)\,y = \sin x + x^2$
4. $(D^2 + 3D + 2)\,y = e^{-x} + x^2 + \cos x$
5. $(D^2 + 3D - 4)\,y = x^2 - 2x$
6. $(D^2 + 2D + 4)\,y = e^{-2x} + x^2$
7. $(D^2 + D + 1)\,y = x$
8. $(D^2 - 2D + 3)\,y = x^2$
9. $(D^2 + 4D + 5)\,y = e^{x} + x^3 + \cos 2x$
10. $(D^2 + D + 1)\,y = x^2.$

7. தணித்த வலேவுகளிலும் (Damped Oscillations) தணித்ததிர்விலும் (Forced Vibrations) வகைக் கெழுச் சமன்பாடுகளின் உபயோகங்கள்

தணித்த வலேவுகள் : ஓர் நேர்கோட்டில் ஒரு குறிப்பிட்ட புள்ளியை நோக்கி ஒரு பொருள் உந்தப்படட்டும். உந்து விசை (force) அப்பொருள் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இருக்கும் தூரத்திற்குத் தகவு பெற்றதாகவும், திசை வேகத்திற்குத் தகவு பெற்ற எதிர்ப்பு (resistance to the motion) அதைப் பாதிப்பதாகவும் இருக்கட்டும்.

$$O \leftarrow \cdots\cdots x \cdots\cdots \rightarrow P$$

P, ஏதாமொரு நேரம் 't', பொருளின் இருப்பிடமாக அமையட்டும். OP = x. O நேர் கோட்டில் நிலேப் புள்ளியாக விருக்கட்டும். x தூரத்திலுள்ள ஓர் அலகுப் பொருண்மையுள்ள பொருளின் மேல் உந்து விசை n^2x ஆக விருக்கட்டும். எதிர்ப்பு $2K \cdot \frac{dx}{dt}$ ஆகவிருக்கட்டும்.

∴ பொருளின் நகர்வை விவரிக்கும் சமன்பாடு என்னவென்ருல்

$$\frac{d^2x}{dt^2} = -n^2x - 2K \cdot \frac{dx}{dt}$$

$$\therefore \quad \frac{d^2x}{dt^2} + n^2x + 2K\frac{dx}{dt} = 0$$

(அ. து.) $\frac{d^2x}{dt^2} + 2K \cdot \frac{dx}{dt} + n^2x = 0.$

இப்பொருளின் நகர்வை 'தணித்தவலேவு' (damped oscillation) எனச் சொல்கிருேம்.

தணித்ததிர்வுகள் (Forced vibrations).

ஒரு நேர் கோட்டில் ஒரு நிலேயான புள்ளி O வை நோக்கி, n^2x உந்து விசைக்குட்பட்டு, எதிர்ப்பு $2K \frac{dx}{dt}$ அளவிலும், ஆவர்த்தன விசை $L \cos pt$ க்கும் உட்பட்டு நகருகிறது. இந்த நகர்வுக்குரிய சமன்பாட்டைக் கணிப்போம்.

$$\frac{d^2x}{dt^2} = -n^2x - 2K \cdot \frac{dx}{dt} + L \cos pt$$

$$\frac{d^2x}{dt^2} + 2K \cdot \frac{dx}{dt} + n^2x = L \cos pt.$$

(i) $K < n$ ஆகவிருந்தால், துணைத்தீர்வு என்னவென்ருல்

$$(A \cos \sqrt{n^2 - K^2}\, t + B \sin \sqrt{n^2 - K^2}\, t).$$

துணைச் சமன்பாடு என்னவெனில்

$$m^2 + 2Km + n^2 = 0$$

$$m = -K \pm \sqrt{K^2 - n^2}$$

(i) $K > n$ ஆனல், m இரண்டு மெய்யான வெவ்வேறு மதிப்புகள் பெறும்.

$$x = Ae^{(-K + \sqrt{K^2 - n^2})t} + Be^{(-K - \sqrt{K^2 - n^2})t} \quad \ldots\ldots \quad (1)$$

(ii) $K = n$ ஆனல், m இரண்டு சமமான மதிப்புகளேப் பெறுகிறது. $m = -K, -K.$

$$x = e^{-Kt}(A + Bt) \quad \ldots\ldots \quad (2)$$

(iii) $K < n$ ஆகவிருந்தால், m கற்பனே மதிப்பைப் பெறுகிறது.

$$m = -K \pm i\sqrt{n^2 - K^2}$$

$$x = e^{-Kt}[A\cos\sqrt{n^2-K^2}t + B\sin\sqrt{n^2-K^2}t \qquad \ldots\ldots \quad (3)$$

(3) வது சமன்பாடு, பொருள் ஊசலாடுகிறது என்பதை வலியுறுத்துகிறது. e^{-Kt} என்பது பெருக்குவதால், ஊசலாடும் வீச்சுக் குறைகிறது. K ன் மதிப்பு அதிகமாக அதிகமாக, வீச்சுக் குறைவின் வேகம் அதிகரிக்கிறது.

சிறப்புத் தீர்வு

$$= \frac{1}{(D^2+2KD+n^2)} \cdot L\cos pt$$

$$= \text{மெ. ப. } \frac{L \cdot e^{ipt}}{(D^2+2KD+n^2)}$$

$$= L \cdot \frac{(n^2-p^2)\cos pt + 2Kp\sin pt}{(n^2-p^2)^2+4R^2p^2}$$

$$= \frac{L\cos(pt-\alpha)}{\sqrt{(n^2-p^2)^2+4K^2p^2}}, \left[\tan\alpha = \frac{2Kp}{n^2-p^2}\right]$$

$$\therefore \quad x = e^{-kt}[A\cos\sqrt{n^2-K^2}t + B\sin\sqrt{n^2-K^2}t]$$

$$+ \frac{L\cos(pt-\alpha)}{\sqrt{(n^2-p^2)^2+4K^2p^2}}.$$

8. ஃபூரியர் தொடரில் தொகைநுண் கணிதத்தின் ஈடுபாடு

(Application of Integration to Fourier Series)

$(0, 2\pi)$ என்ற தொகை நுண் கணித எல்லைகளுக்குள் $f(x)$ என்ற சார்பை

$$f(x) = \frac{a_0}{2} + \sum_{n=1}^{\infty} (a_n \cos nx + b_n \sin nx)$$

என்றெழுதமுடியும். $f(x)$ ன் விரிப்பை, $f(x)$ ன் ஃபூரியர் தொடர் என்கிறோம். இங்கு a_n, b_n இவைகளை $f(x)$ ன் ஃபூரியர் கெழுக்கள் எனச் சொல்கிறோம். அவையாவன

$$a_n = \frac{1}{\pi} \int_0^{2\pi} f(x) \cos nx \, dx$$

$$n = 0, 1, 2, \ldots\ldots$$

$$b_n = \frac{1}{\pi} \int_0^{2\pi} f(x) \sin nx \, dx$$

$$n = 1, 2, 3 \ldots\ldots$$

ஆகவே சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு

$$f(x) = \frac{a_0}{2} + \sum_{n=1}^{\infty} (a_n \cos nx + b_n \sin nx)$$

குறிப்பு: தொகை நுண் கணித எல்லைகள் $-\pi$, π ஆக விருந்தாலும் இத் தேற்றம் இந்த உருவத்தைப் பெறும்.

மாதிரி 1.

(0, 2π) என்ற வீச்சில் (range)

$$x = \pi - 2\left[\sin x + \frac{1}{2}\sin 2x + \frac{1}{3}\sin 3x + \ldots\ldots\right]$$

இதிலிருந்து $\frac{\pi}{4} = 1 - \frac{1}{3} + \frac{1}{5} - \frac{1}{7}$ எனக் காண்.

ஃபூரியர் தொடர் என்னவென்றால்

$$f(x) = \frac{a_0}{2} + \sum_{n=1}^{\infty} (a_n \cos nx + b_n \sin nx)$$

$$\text{இங்கு} \quad a_n = \frac{1}{\pi}\int_0^{2\pi} f(x) \cos nx \, dx$$

$$b_n = \frac{1}{\pi}\int_0^{2\pi} f(x) \sin nx \, dx$$

இங்கு $f(x) = x$ என்று கொடுக்கப்பட்டுள்ளது.

$$\therefore \quad a_n = \frac{1}{\pi}\int_0^{2\pi} x \cos nx \, dx$$

$$= \frac{1}{\pi}\left[\frac{x \sin nx}{n} + \frac{1}{n^2}\cos nx\right]_0^{2\pi}$$

$$= 0$$

$$b_n = \frac{1}{\pi}\int_0^{2\pi} x \sin nx \, dx$$

$$= \left[\frac{-x \cos nx}{n} + \frac{\sin nx}{n^2}\right]_0^{2\pi}$$

$$= -\frac{2}{n}$$

$$a_0 = \frac{1}{\pi}\int_0^{2\pi} x\,dx = 2\pi$$

$$\therefore \quad x = \pi + \sum_{n=1}^{\infty}\left(-\frac{2}{n}\sin nx\right)$$

$$= \pi - 2\left[\frac{\sin x}{1} + \frac{\sin 2x}{2} + \frac{\sin 3x}{3} + \ldots\ldots\right]$$

$x = \frac{\pi}{2}$ ஈடாக்கிஞல்

$$\frac{\pi}{2} = \pi - 2\left[\frac{1}{1} - \frac{1}{3} + \ldots\ldots\right]$$

$$2\left(1 - \frac{1}{3} + \frac{1}{5} - \frac{1}{7} + \ldots\ldots\right) = \pi - \frac{\pi}{2} = \frac{\pi}{2}$$

$$\therefore \quad \left(1 - \frac{1}{3} + \frac{1}{5} - \frac{1}{7}\ldots\ldots\right) = \frac{\pi}{4}$$

பயிற்சி 56

$(-\pi, \pi)$ என்ற வீச்சில்,

$x^2 = \frac{\pi^2}{3} + 4\sum_{n=1}^{\infty}(-1)^n \cdot \frac{\cos nx}{n^2}$ எனக் காண்க.

விடைகள்

பயிற்சி 30

1. $a\frac{x^3}{3} + \frac{bx^2}{2} + cx + K$
2. $\frac{x^5}{5} - \frac{2x^3}{3} + x + C$
3. $\frac{3}{5}x^{5/3} + \frac{3}{4}x^{4/3} + x + C$
4. $\frac{x^3}{3} - \frac{1}{x} - 2x + C$
5. $\frac{2}{5}x^{5/2} - \frac{10}{3}.x^{3/2} + 4\sqrt{x}$
6. $3\sin^{-1}x + 5\tan^{-1}x + C$
7. $-\cot x - x + C$
8. $10\sin x - 5\sec x + C$
9. $x - \cos x + C$
10. $x - \sin x + C$
11. $\tan x - \sec x + C$
12. $\frac{x + \sin x}{2} + C$
13. $\frac{x - \sin x}{2} + C$
14. $\frac{(2+x)^4}{4} + C$
15. $\frac{(1-x)^5}{5} - \frac{(1-x)^4}{4} + C.$

பயிற்சி 31

1. $\frac{(2x+3)^6}{12}$
2. $\frac{(3-2x)^{11}}{-22}$

3. $\frac{1}{(a-bx)^{n-1} \cdot (-b)(1-n)}$ 4. $-\frac{1}{5}\log(3-5x)$

5. $\frac{e^{2-3x}}{-3}$ 6. $2\sqrt{e^x}$

7. $-\frac{2\sqrt{a-bx}}{b}$ 8. $\frac{(b+ax)^{-p/q+1}}{(1-p/q)\,a}$

9. $-\frac{1}{n}\cos nx$ 10. $-\frac{1}{2}\tan(1-2x)$

11. $-\frac{1}{3}\cot 3x$ 12. $-\frac{1}{2}\operatorname{cosec} 2x$

13. $\frac{1}{3}\sec 3x$ 14. $\frac{x}{2}-\frac{\sin 6x}{12}+C$

15. $\frac{1}{2}\left[-\frac{\cos 4x}{4}-\frac{\cos 2x}{2}\right]$

16. $\frac{1}{2}\left[\frac{\sin 8x}{8}+\frac{\sin 2x}{2}\right]$

17. $\frac{1}{2}\left[\sin x-\frac{\sin 3x}{3}\right]$

18. $\frac{1}{4}\left[x+\frac{\sin 2x}{2}+\frac{\sin 4x}{4}+\frac{\sin 6x}{6}\right]$

19. $\left[\frac{1}{2}\cdot\left(\frac{\sin 3x}{3}\right)-\frac{1}{4}\left(\frac{\sin 5x}{5}+\sin x\right)\right]$

20. $-\frac{3}{4}\cos x+\frac{\cos 3x}{12}+C$

21. $\frac{1}{36}\cdot\sin 9x+\frac{1}{4}\sin 3x$;

22. $\frac{1}{12a}\cos 3ax-\frac{3}{4a}\cos ax$

23. $\frac{1}{192}\cos 6x - \frac{3}{64}\cos 2x$

24. $2(a-b)\,.\tan\frac{x}{2}$ 25. $\frac{a^{mx}}{m\log a}$.

பயிற்சி 32

1. $\tan(\log x) + C$ 2. $\frac{(e^x+1)^5}{5} + C$

3. $\frac{(\tan^{-1} x)^2}{2} + C$ 4. $\log(\tan^{-1} x) + C$

5. $e^{sin^{-1} x}$ 6. $\frac{1}{11n}\cdot(a^2 + x^n)^{11} + C$

7. $-\frac{1}{n}\cos(x^n) + C$ 8. $-2\cos\sqrt{x}$

9. $2\,.\frac{(1+\sqrt{x})^{n+1}}{n+1}$ 10. $-\cos(\tan^{-1} x) + C$

11. $-\left(\frac{1}{a}+\frac{1}{n}\right)^{n+1}\cdot\frac{1}{n+1} + C$

12. $e^{x+1/x} + C$ 13. $\log(1+e^x)+C$

14. $\frac{2}{3}\sin^{3/2} x - \frac{4}{7}\sin^{7/2} x + \frac{2}{11}\sin^{11/2} x$

15. $(\log\sin x)^{2/2}$ 16. $\frac{2}{3}\tan^{3/2} x$

17. $-\frac{\cos^3 x}{3} + 2\frac{\cos^5 x}{5} - \frac{\cos^7 x}{7} + C$

18. $\frac{\sec^6 x}{6}$ 19. $\frac{-1}{1+e^x}$

20. $(\log\sec x)^{2/2}$.

பயிற்சி 33

1. $\log \sin x - \frac{(\sin x)^2}{2} + C$

2. $\log (e^x+1)+C$

3. $\log (e^x+e^{-x})+C$

4. $\log (5 \sin x+3 \cos x)$

5. $\log \log \sin x$

6. $\frac{1}{nb} \log (a+bx^n)$

7. $-\frac{1}{\sec x+\tan x}$

8. $\log (x+\sin x)$

9. $\frac{1}{b} . \log (a+b \tan x)$

10. $\frac{1}{2a} \log (ax^2 + b) + C.$

பயிற்சி 34

1. $\frac{1}{\sqrt{2}} \tan^{-1} \left(\frac{x+1}{\sqrt{2}}\right)$

2. $-\frac{1}{x-6}$

3. $\frac{1}{12} \log \frac{x-7}{x+5} + C$

4. $\frac{1}{3} \log \frac{x+1}{x+4}$

5. $\frac{1}{\sqrt{5}} \log \frac{\sqrt{5}-1+2x}{\sqrt{5}+1-2x}$

6. $\frac{1}{3} \tan^{-1} (x^3+1)$

7. $\frac{1}{2\sqrt{19}} . \log \frac{3x-2-\sqrt{19}}{3x-2+\sqrt{19}}$

8. $\frac{1}{3} \log \frac{4x + 2}{4 - 4x}$

9. $\frac{1}{2} \log (x^2+4x+5) - \tan^{-1} (x+2)+C$

10. $-\frac{1}{6} \log (1-6x-9x^2) - \frac{1}{2\sqrt{2}} \log \frac{\sqrt{2}+3x+1}{\sqrt{2}-3x-1} + C$

11. $\frac{5}{2}\log(x^2-2x-35)+\frac{1}{2}\log\left(\frac{x-7}{x+5}\right)$

12. $-\frac{1}{6}\log\frac{(3+2x-3x^2)}{}+\frac{8}{3\sqrt{10}}\log\frac{\sqrt{10}+3x-1}{\sqrt{10}-3x+1}$

13. $2\log(x^2+2x+2)+\tan^{-1}(x+1)$

14. $x+\log(x^2-x+1)+\frac{2}{\sqrt{3}}\tan^{-1}\left(\frac{2x-1}{\sqrt{3}}\right)+C$

15. $(x-2)\tan^{-1}(x+1)$

16. $-\frac{3}{4}\log(2x^2-6x+5)-\frac{7}{2}\tan^{-1}(2x-3)$

17. $\frac{1}{8\sqrt{5}}\log\frac{\sqrt{5}+x^4-1}{\sqrt{5}-x^4+1}$

18. $-x+\log\frac{1-x-x^2}{}+\frac{3}{\sqrt{5}}\log\frac{\sqrt{5}+2x+1}{\sqrt{5}-2x-1}$

19. $-\frac{1}{8}\log(4x^2-4x+3)+\frac{\sqrt{2}}{8}\tan^{-1}\frac{2x-1}{\sqrt{2}}$.

பயிற்சி 35

1. $-2\log(x-1)+3\log(x-4)+C$

2. $\frac{11}{32}\log(x-6)-\frac{11}{32}\log(x+2)-\frac{1}{4(x+2)}$

3. $\log\frac{x}{(x+1)^{1/3}(1-2x)^{2/3}}$ 4. $\frac{1}{2}\log\frac{x^2}{\sqrt{x^4+1}}$

5. $x+\log\frac{(x-2)^4}{x-1}$ 6. $3\log(x+2)+\frac{5}{x+2}$

7. $\frac{2}{a}\log\frac{x-1}{x+2}-\frac{1}{3}\frac{1}{x-1}$

8. $\frac{1}{8}\log\frac{x-1}{x+1}-\frac{3}{4(x-1)}-\frac{1}{4(x-1)^2}$

9. $\frac{1}{9}\log\frac{x-1}{x+2}-\frac{2}{3(x-1)}$

10. $\frac{1}{3}\log(x-1)+\log(x+1)-\frac{5}{6}\log(2x+1)$

11. $\frac{1}{4}\log(1+x^2)-\frac{1}{2}\log(1+x)+\frac{1}{2}\tan^{-1}x$

12. $\log(x-2)-\frac{1}{2}\log(x^2+1)+\tan^{-1}(x)$

13. $\frac{1}{3}\log\frac{x-1}{\sqrt{x^2+x+1}}+\frac{1}{\sqrt{3}}\tan^{-1}.\frac{2x+1}{\sqrt{3}}$

14. $\frac{1}{2}\log x^2+x+1-\log x-\frac{1}{x}-\frac{1}{\sqrt{3}}\tan^{-1}\frac{2x+1}{\sqrt{3}}$

15. $\log\frac{\cos x+1}{(\cos x+2)^2}$

16. $\log\frac{\sin x}{1+\sin x}$

17. $\log\frac{\tan x+1}{\tan x+2}$

18. $\frac{1}{2}\log\frac{x^2+1}{x^2+3}$

19. $\frac{1}{6}\log(x^2-x+1)-\frac{1}{3}\log(x+1)+\frac{1}{\sqrt{3}}\tan^{-1}\frac{2x-1}{\sqrt{3}}$

20. $\frac{1}{a^2-b^2}\left[\frac{1}{b}\tan^{-1}.\frac{x}{b}-\frac{1}{a}\tan^{-1}.\frac{x}{a}\right].$

